உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 24 திங்கட்கிழமை (10.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 284

# சர்வதேச கண்காணிப்புக் குழுவை அமைக்கும் கோரிக்கை வலுக்கிறது

## மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

கொழும்பு,செப்ரெம்பர்10

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆறாவது கூட்டத் தொடர் இன்று சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் ஆரம்பமாகின்றது.

இச்சமயத்தில் இலங்கையில் மோசமாக அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு சுயாதீனமான - சர்வதேச - கண்காணிப்புக் குழு ஒன்றை அங்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை சர்வதேச மட்டத்தில் வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடங்கி இம்மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கும் இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் முக்கிய இடத்தைப் பிடிக்கும் எனப் பல தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்று வரும் சட்டவிரோதமான ஆள்கடத்தல்கள், காணாமற் போகச்செய்தல், கப்பம் அறவிடல், படுகொலைகள் ஆகிய மனித உரிமை மீறல் தொடர்பான விடயத்தை முக்கிய அம்சமாக இக்கூட்டத்தொடரில் தூக்கிப் பிடிப்பதற்கு பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் கங்கணம் கட்டி நிற்கின்றன. அதேசமயம் ஐரோப்பிய யூனியன் உட்பட பல சர்வதேச நாடுகளின் ஆதரவும் இந்தத் தரப்புகளுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வட்டமிட்ட விமானம் வன்னியில் தாக்கவில்லை

கிளிநொச்சி,செப்.10

வன்னிப் வான்பரப்பில் நேற்று மாலை 5.30 மணியளவில் வட்டமிட்ட 'கிபிர்' விமானங்கள் தாக்குதல் நடத்தாமல் திரும்பிச் சென்றன.

மேகமூட்டம் அதிகமாக இருந்தாலும் மழை தொடர்ந்து பெய்ததாலும் விமானங்கள் தாக்குதல் நடத்தாமல் சென்றிருக்கலாம் என்றுகூறப்பட்டது.

இதேவேளை, கடந்த இரு தினங்களாக வன்னியில் கடும் மழை தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-5)

## வதிரியில் முகமூடிக் கொள்ளையர்; காயமுற்றவர்கள் ஆஸ்பத்திரியில்!

### இருவர் பொலீஸாரால் கைது

உடுப்பிட்டி,செப்.10

நெல்லியடி - வதிரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு முகமூடி அணிந்த முப்பதுக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட கொள்ளைக் கோஷ்டி பெரும் அட்டகாசம் புரிந்துள்ளது.

மிக மோசமான முறையில், அந்தக் கொள்ளைக் கோஷ்டி வெறியாட்டம் நடத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

வீடுகளுக்குள், வீட்டுக் கதவுகளை, யன்னல்களை உடைத்துப் புகுந்து பெரும் அட்டகாசம் புரிந்தது அந்தக் குழு.


வீடுகளில் இருந்தவர்களை வாள்கள், கத்திகள் கொண்டு விரட்டியும், வெட்டியும் அச்சுறுத்தியும் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துக் கொண்டு அக்குழு தப்பிவிட்டது.

விவரமான செய்தி
11ஆம் பக்கத்தில்

இச்சம்பவத்தை அடுத்து பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகத்தின் உத்தரவில் அந்தப் பகுதிக்கு விரைந்த படையினரும் பொலீஸாரும் தேடுதல் நடத்தி இருவரைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லை முருகன் தேர்த்திருவிழா; காலை 7 மணிக்கு திருஉலா புறப்பாடு



யாழ்ப்பாணம்,செப்.10

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறுகின்றது.

அதிகாலை 5.30 மணிக்கு பூசைகள், வசந்தமண்டப பூசைகள் இடம்பெற்று காலை 7 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஏறி பக்தர்களுக்கு அருள்காட்சி அளிப்பார்.

காலை ஏழு மணிக்கு தேர் உலா புறப்பட்டு வள்ளி - தெய்வயானை சமேத முருகன் 8.30 மணிக்கு இருப்பிடத்துக்குத் திரும்புவார். ஆலயத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த வருடம் நல்லைக் கந்தன் தேர்த்திருவிழா நடைபெறவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை பாதுகாப்புக் குழு நியமிக்கப்பட்டதான தகவல் தவறு!

### மன்னிப்புக் கோருகிறது கொழும்பு அரசு!!

கொழும்பு,செப்.10

இந்திய - இலங்கை உயர்மட்டப் பாதுகாப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தினால் கொழும்பில் வெளியிடப்பட்ட செய்திக்கு -

அரசாங்கம் வருத்தமும் மன்னிப்பும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் கொள்கை ஆராய்வு மற்றும் தகவல் பிரிவு மன்னிப்புக் கோரியுள்ளது.

அது சம்பந்தமாக நேற்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை அரசு கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், புதுடில்லியில் இந்திய உயர் அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனையின் போது பாதுகாப்பு தொடர்பில் இருதரப்புப் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது எனவும் அக்குழுவில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், சிவ்சங்கர் மேனன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பி.பி.ஸி. சிங்கள சேவையான சந்தேசியவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை நேர்காணல் அளித்த இலங்கை வெளிவிவகாரச் செயலாளர் பாலித கோஹன்ன, பாதுகாப்பு தொடர்பிலான உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது என அரசு வெளியிட்ட அறிக்கையை உறுதி செய்திருந்தார்.

ஆனால், இலங்கை அரசு தெரிவித்திருப்பது போன்று அப்படியான எந்த ஒரு குழுவும் அமைக்கப்படவில்லை என்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்துக்கு எதிராக 'சார்க்' பிரகடனம்

கொழும்பு,செப்.10

'சார்க்' பிராந்தியத்திற்கான பயங்கரவாத எதிர்ப்பு உடன்படிக்கை நகல் குறித்து ஆராய்வதற்காக இந்த அமைப்பின் எட்டு நாடுகளையும் சேர்ந்த நிபுணர்கள் இன்று கொழும்பில் கூடுகின்றார்கள்.

இந்தியத் தரப்பு தயாரித்துள்ள இந்த நகல் உடன்படிக்கை ஆராயப்பட்டு இறுதி செய்யப்பட்டதும், எதிர்வரும் ஒக்ரோபர் 26ஆம் திகதி இந்த நாடுகளின் உள்நாட்டலுவல்கள் அல்லது உள்துறை அமைச்சர்கள் புதுடில்லியில் ஒன்றுகூடி அந்த உடன்படிக்கையில் ஒப்பமிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழருக்கு உதவாத இந்தியாவுக்கு ஐ.நாவில் பேசுவதற்கு தகுதி எதுவும் இல்லை!

## தமிழக இளைஞர்களின் நெஞ்சங்கள் எரிமலைகளாக உள்ளன



சென்னை,செப்.10

இலங்கைத் தமிழர்களுக்கு உணவுப் பொருள் மற்றும் மருந்து வகைகளை அனுப்புவதற்கு இந்திய அரசு அனுமதி மறுப்பதற்குக் காரணம் என்ன?

ஜெனிவா உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இந்தியா, இலங்கைத் தமிழர்களுக்கு மனிதாபிமானத்தோடு உதவ மறுக்கிறது. அதனால் ஐ.நா. சபையில் பேசும் தகுதியை இந்தியா இழந்துள்ளது.

இவ்வாறு சொல்கிறார் ம.தி.மு.க. செயலாளர் வைகோ.

யாழ்ப்பாணத்துக்குப் படகுகளில் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு ஆதரவாக நடைபெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

எதியோப்பியா, ருவாண்டா, வியட்நாம் ஆகிய நாடுகளில் மக்கள் பாதிக்கப்பட்ட போது இந்திய அரசு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை வழங்கியிருந்தது. ஆனால் இலங்கையில் தமிழருக்கு மட்டும் நாம் சேகரித்த பொருள்களை அனுப்ப மறுக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக இளைஞர்களின் நெஞ்சங்கள் எரிமலையாக இருக்கின்றன. அவர்கள் உணர்ச்சிவசப்படத் தொடங்கினால் யாராலும் தடுக்க முடியாது.

இலங்கையில் கொல்லப்படும் தமிழர்களின் சாவுகளுக்கு இலங்கை அரசோடு இந்திய அரசும் பதில் சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு ஆயுதங்களையோ போராளிகளையோ நாம் அனுப்பவில்லை. அல்லற்படும் மக்களுக்கு உணவையும் மருந்தையுமே

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிதித் திருத்தச் சட்டமூலங்களின் செல்லுபடித் தன்மை இழுபறியில்!

கொழும்பு, செப்.10

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டவை என சபாநாயகரால் அறிவிக்கப்பட்ட ஐந்து நிதிச்சட்டங்கள் மீதான சர்ச்சை தொடர்கின்றது.

இந்தச் சட்டமூலங்கள் நாடாளுமன்றில் முறையாக நிறைவேற்றப்பட்டவை என்று தெரிவித்து ஒப்பமிடுவதற்கு முன்னர், அவ்விடயம் குறித்துத் தாம் ஆலோசிப்பதற்குக் கால அவகாசம் தேவைப்படுவதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தற்போது தெரிவித்திருக்கின்றார்.

அரசுக்கு அதிகளவு நிதியைத் திரட்டுவதற்காக மேலதிக வரிகளுக்கு வழிசெய்யும் இச்சட்டமூலங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. கடந்த வியாழனன்று நாடாளுமன்றில் பெரும் சர்ச்சைகள், குஸ்திகள், களேபரங்களுக்கு மத்தியில் இச் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன என்று சபாநாயகர் அறிவித்தார்.

அடுத்தநாள் நாடாளுமன்றம் கூடிய போது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், ஜே.வி.பியும் அதனை எதிர்த்தன. அச்சட்டமூலங்கள் மீதான வாக்கெடுப்பு முறையாக நடக்கவில்லை என அவை வாதிட்டன. ஆனால், சபாநாயகர் அந்த ஆட்சேபனையைப் புறக்கணித்தார். சட்டமூலங்கள் முறையாக நிறைவேற்றப்பட்டன எனத் தாம் அறிவித்தமை சரியானது என்றும் அதில் மாற்றம் ஏதுமில்லை என்றும் வெள்ளியன்றும் அவர் மீள அறிவித்தார்.

இதை ஐ.தே.க., ஜே.வி.பி. ஆகியன தொடர்ந்து எதிர்த்துவருகின்றன.

இந்தச் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன என்று கூறப்பட்டாலும் அந்த நடவடிக்கை தவறு எனத் தெரிவித்து நாடாளுமன்ற நிர்வாகத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து, சட்ட நடவடிக்கை எடுக்கவும் அக்கட்சிகள் தயாராகி வருகின்றன.

இதேசமயம், இந்தச் சட்டமூலங்கள் முறையாக - சட்ட ரீதியாக - நிறைவேற்றப்படாததன் காரணமாக, இச்சட்ட மூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அதிகரிப்பை அறவிட வேண்டாம் என சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கடிதம் எழுதி அறிவுறுத்தவும் ஐ.தே.க. தீர்மானித்து நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே இந்தச்சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன என்று ஒப்பமிடுவதற்கான தனது நடவடிக்கையை சபாநாயகர் தள்ளிப்போட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது. (சி)

## ஐ.நாவுக்கு ஜனாதிபதியுடன் 85 பேர் அணி புறப்படுகின்றது!

கொழும்பு, செப். 10

தமது வெளிநாட்டுப் பயணங்களுக்கு பரிவாரங்கள் புடைசூழ, பெரும் எண்ணிக்கையான அணியினரை அழைத்துச் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இம்மாதம் பிற்பகுதியில் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்துக்குச் செல்லும்போது தம்முடன் 85 பேருக்கும் அதிகமானோரைக் கூட்டிச் செல்வார் எனத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இந்த விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக முதல் அணி பெரும்பாலும் இவ்வாரத்தில் நியூயோர்க் செல்லும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையிலிருந்து செல்லும் குழுவினருக்காக ரிட்ஸ் கார்ட்டன் ஹோட்டல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கு தங்குமிட அறை ஒவ்வொன்றும் ஓர் இரவுக்கு 2 ஆயிரத்து ஐந்நூறு அமெரிக்க டொலர் (இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ரூபா) என்ற அடிப்படையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் தகவல் வெளியாகியிருக்கிறது.

இலங்கை அணி இம்முறை மூன்று குழுக்களாக வகுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் பிரதி நிதிகள் குழு, முதலாவது பெண்மணியின் (ஜனாதிபதியின் பாரியாரின்) குழு, வெளிவிவகார அமைச்சரின் குழு என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூன்று குழுவும் சேர்ந்து உருவாகும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஐ.நா. பொதுச்சபைக் குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் போது பெரும்பாலும் 85எட்டிவிடும் என வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தமுறை ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்குபற்றிய சமயம் அவரது அணியின் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் றோஹித போகொல்லாகம, டக்ளஸ்தேவானந்தா, அனுரபிரியதர்ஷன யாப்பா, ஸி.பி. ரட்னாயக்கா, சம்பிக்க ரணவக்க ஆகியோரும் இந்த அணிகளில் செல்கின்றனர். (சி)

### 'அழகன் முருகன்' இறுவட்டு நேற்று வெளியிடப்பட்டது

நல்லூர், செப்.10

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வெளியீடான 'அழகன் முருகன்' இசைப் பாடல்கள் நடன இறுவட்டு வெளியீட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

இளங்கலைஞர் மன்றத் தலைவர் க. சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், மன்றச் செயலாளர் சோ.பத்மநாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். அழகன் முருகன் இசை நடன இறுவட்டின் முதல் பிரதியை யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.ஜனக்குமாரிடம் இருந்து திருமதி நாகரத்தினம் பெற்றுக் கொண்டார்.

இசைப் பாடல்கள் நடன இறுவட்டில் பங்குகொண்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். (1-111)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராமலிங்கம் செல்வராஜா
(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், பாதுகாப்பு உத்தியோகத்தர், ஐ.சி.ஆர்.சி)

அன்னை மடியில் 29.04.1945 — ஆண்டவன் அடியில் 31.08.1997

அன்பின் அணிகலனாய்
பண்பின் இலக்கணமாய்
இன்பத்தின் இருப்பிடமாய் வாழ்ந்து
ஆண்டுகள் பத்தானாலும்
ஆறாது உங்கள் இழப்பு


உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (64683)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 - 07 - 1944



மறைவு 11 - 08 - 2007

அமரர் சின்னத்துரை அருளானந்தம்
(அருள் லொறி உரிமையாளர்)
திதி: திரயோதசி (10.09.2007)

காலமெல்லாம் உம் அருகில் இருப்பேனென்று
கனிவுடன் எம்மை அணைத்து வாழ்ந்த அப்பாவே!
காலன் அழைத்தவுடன் காற்றாய்ப் பறந்து போனீரோ!
இனி என்று காண்போம் உம் திருமுகத்தை?

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், அ.தனலட்சுமி (மனைவி),
அ.கேதீஸ்வரன் (மகன்),

G.P.S.வீதி,
கல்வியங்காடு.

(64673)


### ஆசிரியர் கலாசாலையில் நாளை பாரதி விழா

யாழ்ப்பாணம், செப்.10

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நாளை காலை 10 மணிக்கு பாரதி விழா கொண்டாடப்படவிருக்கின்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அதிவண. ஜெபநேசனும் சிறப்பு விருந்தினராக முன்னாள் நீதிவான் மு.திருநாவுக்கரசும் கலந்து கொள்வர். (1)

### சோலை வரி மதிப்பீடு

யாழ்ப்பாணம்,செப்.10

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை சோலைவரி மதிப்பீட்டு வேலைகளை இன்று முதல் மேற்கொள்ளவுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் மே. சாந்தசீலன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (1-95)


பிரிவுத் துயரில் பங்குகொள்கிறோம்



அமரர்
மங்களகௌரி புவனேஸ்வரன்
(எமது கல்லூரி ஆங்கில ஆசிரியை)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயிலில் மீளவும் சென்றீரே - பிறப்பிடத்திற்கு
இளமை தொடக்கம் இன்முகத்தோடு இருந்து
இன்று முதுமை வரமுன் [illegible]

யாழ்.மத்திய கல்லூரி. -ஆசிரியர்கள் [illegible]

(சி/53633)



உடன் விற்பனைக்கு

3 கோஸ் விக்சர் வாத் சேற், டீசல் எஞ்சின் 10 கோஸ்பவர் (10 H.P.), 3 கேவி (K.V.A.) டைனமோ, என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
இல.88 [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.0776179090

(64639)



## மரண அறிவித்தல்கள்

### வைத்தி அரசன்

(ஓய்வுபெற்ற முன்னாள் சங்கானை பட்டினசபை ஊழியரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், சங்கானை ஸ்ரீ புவனேஸ்வரி ஆலய முன்னாள் தர்மகர்த்தாவும்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி அரசன் நேற்று (09.09.2007) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி - சீதை தம்பதியரின் பாசமிகு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிட்டினன் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் ஸ்ரீஸ் கந்தராசா (ஜேர்மனி), ஸ்ரீ காந்தராசா, ஸ்ரீ தயாளினி (பிரான்ஸ்), ஸ்ரீ தயாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புனிதரேகா (ஜேர்மனி), கஜனி, விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), நந்தகுமார் (ஆசிரியர், கல்விளான் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் சிந்துஜா, அனோமா, சரண்ஜா, நிந்துஷா, கேன்துஷா, சிந்துஜன், ஷானுஜன், முகிழினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லை வீதி,
சங்கானை.
தொ.பே. 0776155374 (64681)

தகவல்:
ஸ்ரீ காந்தராஜா
(காந்தன் - மகன்)

### இராமலிங்கம் பத்மநாதன்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் தற்போது அடம்பன், மன்னார் காத்தான் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பத்மநாதன் (ஓய்வுபெற்ற முதற்தர லிகிதர்) 08.09.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா, மகாதேவன், சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற மருத்துவமாது, கோப்பாய் அரசினர் வைத்தியசாலை) அன்புக் கணவரும் யோகராஜா (சுவிஸ்), அருட் சகோதரி ஜெயந்தி (கொழும்பு), போதகர் ஜெயராஜா (அடம்பன், காந்தாங்குளம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.09.2007) திங்கட்கிழமை 10 மணியளவில் மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(சி-53636)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கெனக் கூறி வெளிநாடுகளிடம் நிதி உதவி கேட்கிறது அரசு

கொழும்பு, செப்.10

கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கென சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்களிடம் நிதி உதவி கோர அரசு முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ள உதவி வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளின் கூட்டத்தில் வைத்து அரசு நிதி உதவி கேட்க இருப்பதாக அறியப்படுகிறது.

கொழும்பில் இயங்கும் சர்வதேச அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுக்கு இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரியாவால் தயாரிக்கப்பட்டுள்ள '180 நாள்களில் அபிவிருத்தி' என்ற தலைப்பிலான மறுவாழ்வுத் திட்டம் இக்கூட்டத்தில் முன்வைக்கப்படும்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

வைத்தியசாலைகள், பாடசாலைகள், அரச கட்டடங்கள் ஆகியவற்றின் புனரமைப்பு, மக்கள் மீள்குடிமர்வுக்கான வீடமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய திட்டங்கள் அமைச்சர் கரு ஜெயசூரியாவின் திட்டத்தில் அடங்கி உள்ளன. (அ-1)

## பருத்தித்துறையிலிருந்து குடத்தனைக்கு பஸ் சேவை

குடத்தனை, செப்.10

பருத்தித்துறையில் இருந்து குடத்தனை பொற்பதிவரை பருத்தித்துறை போக்குவரத்துச் சபையால் தும்பளை ஊடாக பஸ்சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இச் சேவையினால் பொற்பதி, நடுக் குடத்தனை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர்.

இந்த இடங்களைச் சேர்ந்த மக்கள் இதுவரை காலமும் குடத்தனைச் சந்திவரை நடத்தும், சைக்கிள்களிலும் வந்து பருத்தித்துறையில் இருந்து அம்பன்வரை நடைபெற்ற பஸ்சேவையில் பிரயாணம் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறையிலிருந்து அம்பன் வரை செல்லும் பஸ் சேவையும் வழமைபோல் நடைபெற்று வருகின்றது. (203-78)

## கைதடி விக்னேஸ்வராவுக்கு கணனி வாங்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப்.10

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு கணனி இயந்திரம் கிடைக்கவுள்ளது.

கணனி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ஒரு லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாக வித்தியாலய அதிபர் ச. ஞானலிங்கம் தெரிவித்தார்.

## ஓட்டோ சாரதிக்கு அபராதம் விதிப்பு

சுன்னாகம், செப்.10

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி ஓட்டோ செலுத்தியவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் 2 ஆயிரத்து 500 ரூபா மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் வாகனங்களை வீதியில் சோதனையிட்டபோது சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி ஓட்டோ செலுத்திய நபர் மாட்டிக்கொண்டார்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் சுன்னாகம் பொலிஸார் ஆஜர் செய்தபோது உரியவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (1-86)

## அழைப்பாணையை மதிக்காதவர்களுக்கு நீதிமன்று பிடியாணை

வலி. வடக்கு, செப்.10

சட்டவிரோத மின் இணைப்புப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மூவர் நீதிமன்றிற்கு சமுகம் கொடுக்காததால் மல்லாகம் மாவட்ட நீதிமன்று மூவருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது.

சுன்னாகம் பொலிஸார் அந்த மூவருக்கும் எதிராக நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்திருந்தனர். அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் மன்றிற்கு சமுகம் கொடுக்காததாலேயே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (1-202-86)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.10

இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடரான சுவாமி அத்வைதநாதரின் ஜெயந்திவிழா இன்று 5 மணிக்கு தாவடி, கொக்குவிலில் உள்ள சமிதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், செப். 10

அகில இலங்கை திருமுறைமன்றம் நல்லூர் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் தேவாரப்பணி இன்னிசை வீதியுலா நாளை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (203)

## தாதியர் பயிற்சி நெறிக்கு 47 பேர் தெரிவாகியுள்ளனர்

### 15ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், செப்.10

குடாநாட்டில் தாதியர் பயிற்சி நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 47 பேர் இந்தப் பயிற்சி நெறி யில் பயில உள்ளனர்.

இந்தப் பயிற்சிநெறி 15ஆம் திகதி வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டாலும், பயிற்சி நெறி 17ஆம் திகதி முதல் இடம்பெறும்.

தெரிவானோர் விவரம் வருமாறு:

**ஆண்கள்**

பி. தயூரன் - கைதடி தெற்கு, எஸ். ஜஸிகரன் - அராலி மத்தி - வட்டு., கே. பத்மரூபன் - மீசாலை - கொடிகாமம், கே. லவன் - செம்மணி வீதி, நல்லூர், ரி. செந்தூர்குமரன் - மட்டுவில், ரி. கந்தாதரர் - காஞ்சிபுரம் -மாதகல், எஸ். ஜோன்போல் செ. ஜேம்ஸ்லேன், யாழ்ப்பாணம், எஸ்.துவாகரன் - கரணவாய் - கரவெட்டி, எஸ். பிரதீசன் - சுன்னாகம், எஸ். முருகநாதன் - கொற்றாவத்தை - கரவெட்டி.

எஸ். என். சாந்தன் - சாவகச்சேரி, வி. சண்முகப்பிரியன், மாவடி -வட்டுக்கோட்டை, ஆ. ராஜ்குமார் - கொட்டடி - யாழ்ப்பாணம், ரி. பானுமகேந்திரா - கந்தர்மடம் யாழ்ப்பாணம், கே. விமலராஜ் - கைதடி, எஸ். தபோதன் - கலட்டி, பி. உதேந்திரன் - நுணாவில், கே. அனுஷன் - கொக்குவில் கிழக்கு, சி. கனிதன் - குருநகர், வி. திவாகரன் - சங்கரத்தை - வட்டுக்கேட்டை.

என். துளசிதன் - புலோலி வடக்கு, எஸ். ஞானசுந்தரம் - கொடிகாமம், பி. சயன்தர் - நீர்வேலி தெற்கு, ரி. தர்சன் - ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம், எம். நிஷாந்மணதாஸ் - மவுன்ட் கர்மல் வீதி, யாழ்., எம். ஆதவன் - சுன்னாகம் கிழக்கு, பி. திலீபன் - கொழும்புத்துறை, கே. ரஜீவன் - அராலி வடக்கு, பி. சஞ்சீவன் - அச்சுவேலி தெற்கு, எஸ். முகுந்தன் நெல்லியடி, எஸ். சிறிஜெய கணேஷா-புலோலி தெற்கு, எல். ஜோசெப்வாசன் - இளவாலை, வி. பகீரதன் - கைதடி, ரி. ராகுலன் - சுன்னாகம் மேற்கு.

**பெண்கள்**

ஜி. கார்த்திகா - மூளாய் - சுழிபுரம், கே. கெமீனா - நாவற்குழிதெற்கு, எஸ். சுரேக்கா - சங்குவேலி - மானிப்பாய், எஸ். கஜானி - சுன்னாகம் தெற்கு, கே. பகீரதி - சுன்னாகம், எஸ். சிந்துயா - கொழும்புத்துறை, சி. தர்ஷினா - கொக்குவில் மேற்கு, எஸ். நிரஞ்சனா - சுழிபுரம், ரி. மயூரகா - மானிப்பாய் வீதி, யாழ்., ரி. கௌசல்யா - சங்குவேலி தெற்கு, எம். தனுஜா - கோப்பாய் மத்தி, சி. கங்காஜினி - சுழிபுரம். (ப)

*யாழ். பல்கலைக் கழகத்தில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கென அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதிஉதவி வழங்கியுள்ளது. அதற்கான காசோலையை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை விரிவுரையாளர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் யாழ். பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடி வேலிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.*

*(படம் : லக்ஸ்மன்)*



## அரச ஊழியரின் சம்பள சீராக்கம்; புதிய சுற்றறிக்கை வெளிவந்தது

அச்சுவேலி, செப்.10

அரசாங்க ஊழியர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி சீராக்கம் தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின்படி 945 ரூபாவில் இருந்து ஐந்து ரூபா வரையும் வருடாந்த சம்பள உயர்ச்சி சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

நிர்வாக சேவைத் தரங்களை சேர்ந்தவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்ச்சி சீராக்கம் தொடர்பாக அறிவிக்கப்படவில்லை.

அரசாங்க ஊழியர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி சீராக்கம் தொடர்பான பொது நிர்வாக அமைச்சின் 2006/06 ஆம் இலக்க சுற்றறிக்கை கடந்த 24ஆம் திகதி வெளியாகியுள்ளது.

தாபனக் கோவையின் 7ஆம் பிரிவின் 4ஆவது விதியின்படி வருடாந்த சம்பள உயர்ச்சி சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் எதிர்பார்த்ததுபோல அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த சம்பள உயர்ச்சி சீராக்கத்தின் பிரகாரம் ஆகக்கூடிய சம்பள அதிகரிப்பாக 945 ரூபாவும் குறைந்ததாக 05 ரூபாவும மாதச் சம்பளத்தில் அதிகரிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 2007 ஜூன் முதலாம் திகதி தொடக்கம் சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இடைப்பட்ட தரப்படுத்தலுக்கான சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது. (11)

## யாழ். மாநகர அபிவிருத்திக்கு 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நல்லூர், செப்.10

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலடி பொதுக் கிணறு புனரமைத்து நீர்த் தொட்டி அமைப்பதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ரூபா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுனம்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய முன்பள்ளிக்கான கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் யாழ். மாநகர விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் அரியாலை சனசமூக நிலைய சிறுவர் பூங்கா புனரமைப்புக்கென 75 ஆயிரம் ரூபாவுமாக

- ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாநிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (202-111)

## இ.தொ.காவினர் மீண்டும் அமைச்சர் பதவிகளுக்கு...!

கொழும்பு, செப்.10

அரசில் இருந்து அமைச்சர் பதவிகளைத் துறந்த இ.தொ.காவினர்பெரும்பாலும் இன்று திங்கட்கிழமை மீண்டும் பதவிகளை பெறுப்பேற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இன்று நடத்தவுள்ள முக்கிய பேச்சை அடுத்து அவர்கள் பதவிகளை மீளப்பெறுப்பேர்க்க இருக்கின்றனர் என்று நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

பதவி துறந்த கட்சிப் பிரமுகர்கள் பலரும் மீண்டும் பதவிகளை ஏற்குமாறு கட்சித் தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிகிறது. (அ-1)

## குடத்தனையில் வீதிப் புனரமைப்பு

குடத்தனை, செப்.10

பருத்தித்துறை பிரதேசசபையினால் குடத்தனைப் பகுதியில் வீதிகள் புனரமைப்புச் செயயப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் குடத்தனை வலிக்கண்டி மீள்குடியேற்ற வீதி, குடத்தனை காளிவயல் பிள்ளையார் வீதி ஆகியன திருத்தி புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பருத்தித் துறை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.(1-78)

## காலபோக மானிய உரம் மாத இறுதியில் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.10

குடாநாட்டில் காலபோல நெற் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கான மானிய உரம் இம்மாத இறுதியில் வழங்கப்படும் என கமநல அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டு விவசாயிகளுக்குத் தேவையான 2ஆயிரத்து 450 மெற்றிக் தொன் மானிய உரம் தற்போது 'யால' கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மானிய உரம் பெறவுள்ள காலபோல நெற் செய்கையாளர்களிடம் இருந்து ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவை பரிசீலிக்கும் பணிகள் அனைத்தும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், கப்பலில் மானிய உரம் வந்து சேர்ந்ததும் அது கமநல சேவை நிலையங்கள் ஊடாக உரிய விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் கமநல சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கென முட்கம்பிச் சுருள்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் உதவியுடன் காரைநகர், தென்மராட்சி கமநல சேவை நிலையங்களில் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50)

## கசிப்பு விற்பனை ஐவருக்கு அபராதம்

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பெயரில் ஐவருக்கு 67ஆயிரத்து 500 ரூபா மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் அபராதம் - விதிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினரிடம் அகப்பட்டுக் கொண்ட அச்சுவேலி, புத்தூர், நீர்வேலிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் சுன்னாகம் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்ட போது நால்வருக்கு அபராதம் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (1-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**கரம்பொன் கிழக்கு ஸ்ரீகாளிகா புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் ஊர்காவற்றுறை**

மேற்படி தேவஸ்தானத்தில் 31.08.2007 இல் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தில் தற்காலிக நிர்வாக சபை உத்தியோகத்தர்களாக **தலைவர் க.அமிர்த நாயகம், செயலாளர் வீ.ஸ்ரீநிவாசன், பொருளாளர் க.சின்னராசா** ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டுள்ளது என்பதையும் தற்காலிக புதிய நிர்வாகமே ஆலய பரிபாலனத்தை நடைமுறைப்படுத்தும் என்பதையும் சகல அங்கத்தவர்களுக்கும், உபயகாரர்களுக்கும், அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம்.

க.அமிர்தநாயகம்
தலைவர்.

வீ.ஸ்ரீநிவாசன்
செயலாளர்.

(64662)

## PC PARADISE இன் கண்ணீர்த் துளிகள்......



எமது நிறுவனத்தின் K.ரமேஷ் அவர்களின் பாசமிகு தந்தையும், IIS OFFICE AUTOMATION முகாமையாளரும் ஆகிய அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம் அவர்கள் 04/09/2007 அன்று இந்தியாவில் காலமானதையொட்டி மீளாத்துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

No.61, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(64653) PC PARADISE Staff

## கண்ணீர் அஞ்சலி



எமது நல்லூர் அரிமாக்கழக அங்கத்தவர் லயன் K.விக்கினேஸ் அவர்களின் அன்புத் தந்தை **வை.குலரட்ணம்** அவர்கள் 04.09.2007 காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயர்வடைவதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் மறைந்த அமரரின் ஆத்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலியினைத் செலுத்துகின்றோம்.

(64653) கழக அங்கத்தவர்கள், நல்லூர் அரிமாக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 04.09.2007 அன்று இந்தியாவில் சிவபதமடைந்த எமது நிறுவனத்தின் இயக்குநரின் தந்தை

**அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(64628)

**IIS CITY CAMPUS**
அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22.04.1931

உதிர்வு
22.08.2006

**அமரர் தம்பிஐயா செல்வராசா**

திதி: அபரபக்க சதுர்த்தசி

**எமது குடும்பத் தலைவரின் நீங்காத நினைவலைகளுடன்...**

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(64507)

## சமய சந்நிதிகளில்

மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு இடம்பெறவுள்ளது.நாளை தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (203-68)

* * *

சுழிபுரம் மேற்கு ஐயனார் கோயில் அலங்காரத் திருவிழா கடந்த ஆறாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் பகல் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறுகிறது.

பத்தாவது நாள் சங்காபிஷேகத்துடன் திருவிழா நிறைவடையும். (203-28)

* * *

யாழ்.கஸ்தூரியார் அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னை ஆலயப் பெருவிழா கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 15 ஆம் திகதி மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் பவனியும் ஆசீரும் இடம்பெறும். மறுநாள் காலை 7 மணிக்கு பெருவிழாத் திருப்பலி இடம்பெறும் (203)

## தவறிவிட்டது

35, புவனேஸ்வரி அம்பாள் வீதியைச் சேர்ந்த ரஜனி ஜெகதீஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 766914250V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 22/1, சாஸ்திரியார் ஒழுங்கை, அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

## பியானோ தேவை

பாவனையிலுள்ளதும் திருத்தம் செய்து எடுக்கக் கூடியதுமான பியானோ தேவை.

*தொடர்புகளுக்கு:*
BRO: A.T.J.KANESAN
261/7, Kandy Road, Jaffna.
T.P.: 0776945058

(64658)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்
### அழகியல் பயிற்சி வகுப்பு

சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயில் வீதியில் லயன் ஜீவகாந்தன் வீட்டில் அழகியல் பயிற்சி வகுப்பு எதிர்வரும் புதன்கிழமை (12.09.2007) மு.ப. 10 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பிக்கப்படும். பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் இப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிலுமாறு வேண்டுகின்றோம்.

இரா.ஜெயபாலன்
தலைவர்.

(64678)

## தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்
### கடித உறைத் தொழிலகம் TNRDS

மேற்படி சங்கத்தின் உற்பத்திப் பொருள்களான கடித உறை (சகல அளவுகளும்) Brown Bags (சகல அளவுகளும்) Medical envelop என்பன விற்பனை செய்யப்படுகிறது.

- மேற்படி உற்பத்திப் பொருள்களைப் பெற விரும்புவோர் எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- எமது நிறுவன உற்பத்திப் பொருள்களை தரகு அடிப்படையில் விற்பனை செய்யும் விற்பனைப் பிரதிகளும் உடன் தேவைப்படுகின்றனர்.

(சி/53630)

தலைவர்,
தாவடி வடக்கு, கிராம அபிவிருத்திச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



**IIS Office Automation (Toshiba)** இன் *முகாமையாளராகிய*

**வைத்திலிங்கம் குலரட்ணம்**

*அவர்கள் கடந்த 04.09.2007 இல் காலமானதையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

(சி/53609)

**IIS Office Automation (Staffs)**

## கண்ணீர் அஞ்சலி



**IBMS** நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி *கு.விக்னேஸ் அவர்களின் தந்தையும், இயக்குநரின் மாமனுமாகிய,*

**வைத்திலிங்கம் குலரட்ணம்**

*அவர்கள் இறைபதம் அடைந்தமையிட்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

(சி/53608)

**IBMS சமூகம்**



பண்பிலே தெய்வமாய்
பார்வையிலே சேவகனாய்.......

## யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் நடத்தும்
## மகாகவி சுப்பிரமணிய பாரதியார் விழா- 2007

காலம்: நாளை (11.09.2007) செவ்வாய்க்கிழமை
நேரம்: முற்பகல் 11.30 மணி
இடம்: ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி
பிரதம விருந்தினர்: கலாநிதி திருமதி **மனோன்மணி சண்முகதாஸ்**
ஆசியுரை: அதி வண.கலாநிதி **சுப்பிரமணியம் ஜெபநேசன்** (யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபைத் தலைவர்)
வாழ்த்துரை: திரு.**நோயல் அ.விமலேந்திரன்** (கல்லூரி அதிபர்)
சிறப்புரை: சிவத்தமிழ் வித்தகர் **சிவ.மகாலிங்கம்**

நாட்டியம், நாடகம், பாரதி பாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழ் மன்றம்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(சி.53585)

## பிஞ்சுக் குயிலுக்கு நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் மழைத் துளிகள்



எமது அன்பு மாணவி
**செல்வி சங்கவி சக்திவடிவேல்**
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்,
**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.**

(64664)

## கண்ணீர் அஞ்சலி



**IIS Group** இன் நிறைவேற்று அதிகாரி குலரட்ணம் விக்கினேஸ் அவர்களின் அன்புத் தந்தை, IBMS இன் நிர்வாக இயக்குநர் விக்கினேஸ் ஜெயசோதி அவர்களின் பாசமிகு மாமன் **வைத்திலிங்கம் குலரட்ணம்** அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி.53621)

**IBMS, Nelliyady, Karaveddy.**

## கண்ணீர் அஞ்சலி



**விக்னேஸ் (IIS, இயக்குநர், JAFFNA)** அவர்களின் அன்புத் தந்தை எமது பெருமதிப்பிற்குரியவருமாகிய

**வைத்திலிங்கம் குலரட்ணம்**

அவர்கள் கடந்த 04.09.2007 இல் சிவபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர்
**NORTH LANKA IIT**
சங்கானை, யாழ்ப்பாணம்.

(சி.53616)

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகம் பரமேஸ்வரி

தட்டாம்புலம், காரைநகரைச் சேர்ந்த திருமதி சண்முகம் பரமேஸ்வரி 07.09.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் **V.M.** சண்முகம் அர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் ராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற போதனாசிரியர், சிறுகைத்தொழில் திணைக்களம்), மகேஸ்வரி, வேல்முருகன் (வெலிகம ஸ்ரார்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஐயம்பிள்ளை, இராசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன் ஆகியோரின் பெரியம்மாவும் மலர்வேணி, மேகலா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 3.30 மணியளவில் அவரின் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சம்பந்தர் கண்டி,*
*காரைநகர்.*

தகவல்:
சு.ஐயம்பிள்ளை.

(64650)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 10.09.2007



# 1,300 வருடங்கள் பழைமை வாய்ந்த அற்புதக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

## ஆறுமுகனே! அச்சம் போக்கு என்று மன்றாட பக்தர்கள் கூட்டம் திரள்கிறது

திரு நாட்டிலுள்ள வரலாற்றுத் திருக்கோயில்களில் நல்லூர்க்கந்தன் திருக்கோயில் உன்னதமானது பலநூறு வருடப் பழமை மிக்க வரலாறு கொண்ட இத்திருக்கோவில், தமிழ்வேந்தர் வரலாற்றோடு தொடர்புடையது.

இன்று நாம் காணும் திருக்கோயில் 1734ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. ஆதிக்கோயில் நல்லூர் முத்திரைச்சந்தி கிறிஸ்தவ ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் பெரும் மாடமாளிகையோடு, யமுனா ஏரி தீர்த்தத் தடாகத்தோடு விளங்கியதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. செண்பகல் பெருமாள் ஆட்சிக் காலத்தில் (1450-1460) இவ்வாலயம் தோற்றம் பெற்று தமிழ்வேந்தன் சனகசூரியன் காலத்தில் பெருங்கோயிலாக கட்டப்பெற்று நல்லை பெரு நகரமாகியது.

சிங்கைப் பரராஜசேகரன் தந்தையின் வழியில் நின்று நல்லைக்க்ந்தன் கோயிலை மேலும் விஸ்தரித்ததோடு நல்லூர் திருநகர் எல்லைகள் தோறும் காணற் கோயில்களை அழகாக அமைத்தான். கிழக்கில் வெயிலுகந்தபிள்ளையார் ஆலயம், தெற்கில் கையிலாச நாதர் ஆலயம், மேற்கில் வீரமாகாளி அம்மன் ஆலயம், வடக்கில் சட்டநாதர் ஆலயம் என நல்லை நகரில் ஆன்மீக அரண்களாக ஆலயங்களைத் தோற்றுவித்தான். இவனது கொடை அழகைப்புலவர்கள் மஞ்சும் அஞ்சும் கைப்பரராசசேகர மன்னன் என வாழ்த்தியுள்ளனர். இவனது ஆட்சிக் காலத்து நல்லூர் கற்பனைக்குள் அப்பால் எல்லையில்லா நிலையில் சிறப்புடன் மிளிர்ந்தது.

### போர்த்துக்கேயர் காலத்தில் தொடங்கிய அவலமும் அச்சமும் தொடருகின்றன

எம்மண்ணின் தனித்துவம் மகத்துவம் ஆன்மீக சூழல் அனைத்தும் 1505ஆம் ஆண்டு போத்துக்கேயரின் வருகையோடு அழிவுறத் தொடங்கியது. நல்லூரைக் காக்க சங்கிலி மன்னன் தன் உயிரை அர்ப்பணித்துப் போராடினான். இறுதியில் வீரமாகாளி அம்மன் முன்றலில் உக்கிரப் போர் செய்தான். போர்த்துக்கேயர் தளபதி பிலிப் த ஒலிவெறா என்பான் சங்கிலியானை சிறைப்படுத்தினான் நல்லூர் அழிந்தது. பெருங்கோவில் சீலமுற்றது. அன்று அழுத எம்மினம் இடைஇடையே ஆறுதல் பெற்றாலும் அழுகையும் அவலமும் அச்சமும் தொடர்கிறது.

போர்த்துக்கேயர் இடித்த பெருங்கோயில்களில் பெரும்பகுதியை ஒல்லாந்தர் யாழ். கோட்டை கட்டடப் பயன்படுத்தினர். நல்லூர் முருகன் திருக்கோயில் இருந்த இடத்தில் ஒல்லாந்தர் தம் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ கோயிலைக் கட்டினர் சைவ மக்கள் அகத்தில் நல்லைக் கந்தன் ஆலயத்தைச் சுமந்தனர். சிலர் நல்லூர் கந்தன் ஆலயம் இடித்த இடங்களிலுள்ள கற்களைக் கொண்டு போய் வீட்டில் வைத்து அன்னியராட்சியில் மறைமுகமாக வணங்கினர். சிலர் நல்லை முருகனின் வேலாயுதங்களை வீடுகளில் மறைத்து வழிபாடு செய்தனர்.

அல்லும் பகலும் நல்லைக்கந்தனை அகத்திலே வழிபட்ட குடும்பத்தில் உதித்த இரகுநாத மாப்பாண முதலியார் என்ற பெரியவர் எடுத்த முயற்சிகளின் பலனாக இன்று நாம் பூஜிக்கும் ஆலயம் 1734ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. அக்காலத்தில் கச்சேரியில் உத்தியோகம் பார்த்த இப்பெருமகன் தொடக்கிய இத்திருக்கோவில் அவரது வழிவந்த ஆறுமுக மாப்பாண முதலியார் அவர்களால் மேலும் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகம் கண்டது. பின் தொடர்ந்து இரகுநாத மாப்பாண முதலியார் என்ற அறங்காவலர் ஆலய பூசைதிருவிழா ஒழுங்குகளை மேண்மைப்படுத்தினார்.

இவரது மூத்தமைந்தன் சண்முகதாஸ் மாப்பாண முதலியார் கோயிலை மேலும் புனர்நிர்மாணம் செய்து பெருங்கோவில்கள் எனப்பல பணிகள் நிறைவேறின.

இன்று இவரது சகோதரன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் மிகச் சிறப்பாக கோவிலை வழி நடத்தி வருகிறார். சிறந்த ஆளுமையுள்ள இவர் கோயிலை அழகாக நிர்வகிப்பதில் மிகுந்த அக்கறையோடு செயற்படுகிறார். கொழும்பு றோயல் கல்லூரியில் கற்று உயர் பதவி வகித்த இவர் கடந்த நாற்பது ஆண்டுகளாக தன்னை அர்ப்பணித்து கோயிலை சீரிய முறையில் வழி நடத்தி வருகிறார். இவர்காலத்தில் ஆலய முன் மண்டபம், திருத்தேர் மண்டபம் புதிதாகக் கட்டப்பட்டதோடு ஆலய ஆறுமுகசுவாமி வாசலையும் தென்திசை தீர்த்தத் தடாகத்தை இணைந்து தெருவீதி மூடப்பட்டு கோவில் உள்வீதி பிரமாண்டமாக்கப்பட்டது. பருத்தித்துறை வீதி புதிய பாதையாக மாற்றி அமைக்கப்பட்டது. உள்வீதி கூரைகள் யாவும் சிமெந்தால் ஆக்கப்பட்டு புதுமை பெற்று வருகிறது.

இந்த ஆண்டு கோபுரங்கள், மணிக்கோபுரங்கள், தேர்மண்டபம் தங்கமுலாம் பூசப்பட்ட புதிய கலச முடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. முதுமையிலும் திருநீற்றுப் பொலிவோடு மிக அடக்கமாக கோயில் கடமைகளை ஆற்றி வருகிறார் குமாரதாஸ் மாப்பாண முதலியார். தன்னை முன்னிலைப்படுத்தாமல் எளிமையாக நின்று பணியாற்றி வருகிறார். கோயில் எஜமான் என அவரை அன்போடு அழைப்பார்கள்.

இப்பெரியாரின் அருமைப் புதல்வர் பொறியியல் கல்வி கற்றவர் தந்தையின் வழியில் கோயிலை வழிநடத்தும் தகுதியுடையவர். தந்தைக்குப் பக்கபலமாக நின்று ஆலய நிர்வாகத்தை வழிநடத்தி வரும் இவர் மிகவும் இனிமையான் குரலில் பாடும் வல்லமையுடையவர். பண்ணோடு திருமுறைபாடுவது திருப்புகழ் இசைப்பது இவரது சிறப்பியல்பாகும். சயன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் என்ற வம்சாவழி நாமம் கொண்ட இவர் எதிர்கால நல்லூர் கந்தன் ஆலய விஸ்தீரணம் தொடர்பாக பல்வேறு திட்டங்களை ஆராய்ந்த வண்ணமாகவுள்ளார்.

### நல்லூரான் நம்மண்ணைக் காப்பான்

ஆண்டு தோறும் ஆடி அமாவாசையை அடுத்து வரும் ஆறாம் நாள் கொடியேறி 25 தினங்கள் மகோற்சவம் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இவ்வாண்டும் கொடியேறி இன்று தேர்த்திருவிழா இடம்பெறுகிறது. பல லட்சம் மக்கள் பக்தி பூர்வமாகக் கூடி பரவசமாக வழிபடும் புனிதநாள் இன்று. சென்ற ஆண்டு அசாதாரண சூழ்நிலையால் திருத்தேர்பவனி இடம்பெறாமையால் மக்கள் மிகவும் வேதனையடைந்தனர். இவ்வாண்டும் சுவாமி வீதியுலா திருத்தேர்விழா நடை

செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

பெறுமா என்ற ஏக்கம் மக்களிடம் திருவிழாத் தொடங்கு முன்னரே ஏற்பட்டது. எனினும் முருகப் பெருமானின் பெருங்கருணையால் பொழுது சாய்வதற்கு முன் மாலைத் திருவிழாவும் வீதியுலாவும் நடந்து முடிந்து மக்கள் மனதை ஆறுதல் படுத்தியுள்ளது. பெருந்தேர் விழா நடைபெறும் என்பதற்கு கட்டியம் கூறும் வகையில் கார்த்திகைத் திருவிழா அன்று திடீரென திருத்தேர் "வெள்ளோட்டம்" ஓடியது ம்க்கள் உள்ளத்தில் பக்தி எழுச்சியை உண்டாக்கியது.

நல்லூர்க் கந்தனின் திருவிழா நாளில் அழுத கண்ணோடு அபயம் அபயம் ஆறுமுகா என மன்றாடும் பக்தர் வெள்ளம் திரண்ட வண்ணமாகவுள்ளது. திருத்தேர் நாளில் குடாநாட்டு மக்கள் திரண்டு வந்து ஆறுமுகப்பெருமானை ஆறுதல் தா, அச்சம் போக்கு என்று மனம் உருகி மன்றாட திரள்வர், வேண்டுவர் என்பதில் ஐயமில்லை. நல்லூரான் நம்மையும் நம் மண்ணையும் காப்பான் என்பதில் எல்லோருக்கும் பரிபூரண நம்பிக்கையுண்டு. நல்லூரை கும்பிட்டு நீ பாடு நாட்டிலுள்ள பிணிகள் ஓடும் என்ற யோகசுவாமிகளின் வாக்கு அற்புதமானது. ★



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 10.09.2007



## நல்லைக் கந்தனுக்குத் தேர்த்திருவிழா

நல்லூர் என்றதும் தமிழர்களின் நெஞ்சில் அரும்பி நாவில் மலர்வது நல்லூர்க் கந்தனின் தாரக மந்திரமாகிய ''ஓம் முருகா'' என்பதாகும்.

நல்லூரையும் மக்களையும் புனிதப்படுத்திப் பேரின்ப வாழ்வைத் தருகின்ற நல்லூர்க் கந்தன் திருவிழா யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல அகில இலங்கையுடன் கடல் கடந்த பிரதேசங்களிலும் வாழ்கின்ற தமிழ் மக்களின் நெஞ்சங்களையும் நல்லூர்க் கந்தனின் பெருவிழா ஈர்த்து ஆட்கொண்டு விடுவதென்றால் நல்லூர்க் கந்தன் திருவிழா பற்றிக் கூறவும் முடியுமா?

முருகப் பெருமான் எப்போது உண்டாகினானோ அப்போதே நல்லூர்ப் பதியையும் தனதுடைமையாக்கி விட்ட காலம் வரையறுத்துக் கூறமுடியாத ஒன்றாகும். முருகன் அகில உல கிலும் தமிழ் பேசும் மக்கள் நெஞ்சங்களைக் கோயில் கொண்டபோதும் தமிழ் நாடாகிய இந்தியாவிலும் சேய் நாடாகிய ஈழத்திலும் சிறப்பான கோயில்களைக் கொண்டுள்ளான். இலங்கை முழுவதிலும் முருகனுக்குக் கோயிலுமுண்டு; மந்திரங்களும் உண்டு.

ஈழவள நாட்டில் ஆதிகாலந் தொட்டு அநேகமான முருக ஆலயங்கள் இருந்தபோதும் சிறப்பாக ஆறுபடை வீடு போன்ற ஆறு முருக ஆலயங்கள் மக்களாற் பெரிதும் போற்றப்பட்டன. அவை யாவன காவடிக் கந்தன் என்றழைக்கப்படும் மாவிட்டபுர மாவைக் கந்தன் என்றும் அன்னதானக் கந்தனென அழைக்கப்படும் செல்வச்சந்நிதி என்னும் ஆலயமும் அபிடேகக் கந்தனென அழைக்கப்படும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் என்பவற்றுடன் வல்வெட்டித்துறை கந்தவனக் கடவை, கொக்குவில் முருகன் ஆலயம், இணுவில் முருகன் ஆலயம் என்பனவாகும். இவற்றுள் மிகச் சிறந்த நல்லூர் முருகன் ஆலயம் வரலாற்றுச் சிறப்பும் அற்புதமும் கொண்டதாகும். ஒரு மாபெரும் சித்தர் வரிசையே உருவாகுவதற்கு நல்லூர்த் தேரடியே மூலகாரணமாக இருந்த தென வரலாறுகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்துச் சித்தர் வரிசையில் முதன்மையானவர் விசர்ச் செல்லப்பாச் சுவாமிகள்.

அவர்நல்லூர்த் தேரடியில் இருந்து தவத்திரு யோகர் சுவாமிகளைச் சீடனாகக் கொண்டு நல்லூர் முருகப்பெருமானை வணங்கி வாழ்வாங்கு வாழ மூன்று மகாமந்திரங்களை விதைத்தார். ஒரு பொல்லாப்பும் இல்லை. எப்பவோ முடிந்த காரியம். முழுவதும் உண்மை என்பனவாகும் அவை. நல்லூர்த் திருவிழாக் காலங்களில் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் பக்தி வெள்ளம் பாயப் பெருவிழாக் கோலமாகவே காணப்படும். முருகப் பெருமானுக்குப் பிரார்த்தனை செய்து வேண்டுதல் செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியே. ★

## மயில்வாகனன் - அவன் முருகன்!

முருகன் பேரருளாளன். அவன் அருளைப் பெறவேண்டும் என்று நமக்கு இருக்கும் ஆவலைவிட, அதிகமாக நமக்கு அருள் செய்ய வேண் டும் என்ற பேரார்வம் அவனுக்கு இருக்கின்றது. அவன் மனவாக்கிற்கு எட்டாத பொருள் என்றாலும் அன்பர்களுக்கு அருள் செய்வதற்காக கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு எழுந்தருளுகின்றான். அவன் இருக்கும் இடத்தை அறிந்து அணுகுவது என்பது முடியாத காரியம். ஆகவே அவன் நமக்கு அருள் புரியும் பொருட்டு மயில் வாகனத்தில் எழுந் தருளுகிறான். அதனால்தான் போலும் முருகபிரான் மயில்வாகனத்தில் இருக்கும்போது ஒரு காலை கீழே வைத்திருக்கிறான். பக்தர்கள் உள்ள இடத்தை நாடிச் செல்கிறவன் அவன் என்பதையே இது புலப்படுத்துகிறது.

முருகனை தரிசிக்க வேண்டுமானால் ஒன்று நாம் அவன் இருக்கும் இடத்திற்குப் போகவேண்டும். அல்லது நாம் இருக்கும் இடத்திற் அவன் ''வரவேண்டும்''. முருகபிரான் இருக்கும் 'கந்தகிரியை' அடைவது என்பது இயலாத காரியம். நாம் அவனுக்காக ஏங்கவேண்டும். அவனை நாடிச் செல்ல வேண்டும். தன்னை நாடி வருவதை அறிந்து அவனும் நம்மை நாடி வரு வான். தளர் நடையிட்டு வரும் குழந்தையை தாய் ஓடிச்சென்று அணைப் பது போல நாம் அவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் அவன் நம்மை நோக்கி மயில் வாகனத்தில் பறந்து வருவான்.

(நன்றி: செ.தேவதாசன், காரைநகர்)


பன்னிரு கரத்தோனே வேலவா! நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்திட நின் அருள் புரிவாயாக!

உங்கள் முன்னேற்றத்தில் நிதித் தேவைகளின் பங்காளியாக
31 வருடங்களாக யாழ். மண்ணில் சேவையாற்றி வரும் நாம்

- நிலையான வைப்புகளிற்கு அதியுயர் வட்டி வீதம்
- உயர் வட்டியுடன் சாதாரண மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள்
- வாகனம், வீடு, காணி கொள்வனவுகளுக்கான இலகுமுறை கடன் வசதிகள்
- வீடு கட்டுதலுக்கான கடன் வசதிகள்
- வெளிநாட்டு உயர் கல்விக்கான கடன் வசதி
- பண வைப்புக்களுக்கான விரைவான கடன் வசதிகள்

இவற்றுடன் மேலும் பல சேவைகளை வழங்கும்
ஒரே ஒரு தனியார் நிதி நிறுவனம்.

உங்கள் வெற்றியே எங்கள் இலக்கு!
த பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
www.thefinance.lk

☎ 021 - 222 6256 Fax: 021-222 2310

இல.36, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.இல. 021 226 4170

இல.19, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.இல. 021 222 2035



நீங்கள் ஏன் எமது வாடிக்கையாளர் ஆகக்கூடாது?

BOC இதோ எங்கள் உறுதித் தன்மைக்கான சான்றுகள்!

இலங்கையின் முதற்தர வங்கி
(No.01 வங்கி)

கந்தா உந்தன் கருணை முகம் கண்டோம் நல்லூர் வாசலிலே

01. வங்கியாளர்களைத் தரப்படுத்தலில் அதியுயர் மதிப்பீடு பெற்ற வங்கி
02. ரூ.400 பில்லியனுக்கு மேற்பட்ட மிகப்பெரிய சொத்துத்தளம் (40,000 கோடி ரூபாய்கள்)
03. ஒப்பீட்டு ரீதியில் உள்நாட்டு வங்கிகளிடையே அதிகூடிய தொகையான ரூ.18 பில்லியன் கொண்ட முதலீட்டு அடித்தளம்
04. ரூ.7.3 பில்லியன் வரையான உயர்ந்த தனிநபர் கடன் வசதி
05. 62 லட்சத்துக்கு அதிகமான வாடிக்கையாளரை கொண்ட வங்கி
06. 500இற்கு அதிகமான சேவை நிலையங்களில் ஒன்றிணைக்கப்பட்ட பாரிய வங்கிச் சேவை.
07. 50%இற்கு அதிகமான பங்குகளைத் தன்னகத்தே கொண்டு திறைசேரியின் வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் தலைமை வகிக்கும் வங்கி.
08. கடல் கடந்த வங்கிச் சேவையில் 38% இற்கும் அதிகமான சந்தைப் பங்கைக் கொண்ட வங்கி.
09. இலங்கையின் நிதி வர்த்தகத்தில் 33% இற்கும் அதிகமான சந்தைப் பங்கு.
10. வெளிநாட்டு பண அனுப்புகையில் 58%இற்கு அதிகமான பங்கினை உள்வாங்கும் வங்கி
11. இலங்கையின் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் 32% இனைத் தன்னகத்தே கொண்டது.
12. ரூ.230 பில்லியனுக்கு (23,000 கோடி ரூபா) அதிகமான கடன்களை வாடிக்கையாளருக்கு வழங்கியுள்ள வங்கி
13. 550இற்கு அதிகமான வெளிநாட்டு முகவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட வங்கி
14. லண்டனில் கிளையைக் கொண்டுள்ள ஒரேயொரு சுதேச வங்கி
15. சர்வதேச நிதி நிறுவனங்களின் கணக்கியல் தரப்படுத்தலில் AA (LKA) எனும் உயரிய ஸ்தானத்தைக் கொண்ட முதன்மைச் சுதேச வங்கி





நீல மயில்மீது ஞாலம் வலம் வந்த வேலவா! நீ தேரேறி இவர்ந்து வினை போக்க நல்லை வீதியில் வா! வா!!


★ புத்தம் புதிய தரம்மிக்க மோட்டார் சைக்கிள்களா?
★ M.D. - 90 மற்றும் ரீக் கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
★ அவற்றுக்கான உதிரிப்பாகங்களா?
★ பற்றறி வகைகளா? ★ அஸிட் வகைகளா? ★ சோலர் வகைகளா?

இவை அனைத்தையும் ஒரிடமாகவே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
இல.108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை இல.262, கண்டி வீதி, சாவகச்சேரி.

அருள் விநாயகர் ரேடர்ஸ்
இல.108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 10.09.2007



## தொல்லை வினை தீர்க்க தேரேறி வருகிறான் நல்லைப்பதி வாழ் ஆறுமுகப்பெருமான்

கலியுக வரதனாகிய முருகப்பெருமான் தம்மைவழிபடும்அடியார்களின்துயர்களைய வென்றே எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் இடமே நல்லூர் கந்தசுவாமி கோயில்.

இன்று அந்த நல்லைக் கந்தனுக்கு தேர்த் திருவிழா. பெருந்திரளான மக்களின் கூட்டத் தால் நல்லூர் நிரம்பிவழியும் பொன்னான நன்னாள் இது.

பந்தவினையறுக்கும் பாலசுப்பிரமணி யன் மக்களுக்கு எந்தவொரு தீங்கும் வரா மல் காத்து இரட்சிப்பதற்காகவும் துன்பங் களை வேரோடு களைந்து அசுரபலத்தை அழித்தொழிப்பதற்காகவும் சித்திரத்தேரிலே இன்று சிங்காரப்பவனி வருகின்றான்.

வருடாந்த மகோற்சவத்தில் தேர்த்திரு விழா அழித்தலைக் குறிக்கும். எனவே நல் லையில் உறைந்திருக்கும் கந்தன் இன்று ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதராக ஈராறு கரங் களுடன் ஓராறு முகங்களுடன் தீராத வினை



நல்லை ஆதீன குருமுதல்வர் இரண்டாவது குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

தீர்க்கும் ஷண்முகப் பெருமானாக தீயவற்றை அழிக்கத் தேரிலே புறப்படுகிறான். தொல்லை வினை தீர்த்திடும் நல்லைக்கந்தப் பெருமான் தமது அடியார்கள் நல்வாழ்வு வாழத் திருவ ருள் புரியவேண்டுமென்று அவனது பாதக் கமலங்களைப் பணிந்து நல்லைக் குருமணி யின் திருவடிகளையும் வணங்கி உளமாரப் பிரார்த் தித்து அருளாசி வழங்குகின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

## வாயார வாழ்த்தி அருள்பெறுவோம்

இன்று திங்கட்கிழமை எல்லாம்வல்ல நல்லூர் கந்தப்பெருமான் தேர் ஏறி வருகின்ற



கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

காட்சியை அடியார்கள் எல்லா ரும் கண்குளிரக் காண இருக்கி றார்கள். அற்புதக் கந்தன் என்றும் அபிஷேகக் கந்தன் என்றும் அலங்காரக்கந் தன் என்றும் நாத்தழும்பு ஏற வாழ்த்தி நிற்ப வர்கள் சைவமக்கள்.

புலவர்களும், முனிவர்களும், ஆத்மீகவாதி களும் பாடிப் பாடி பரவசம் அடைகின்ற நாள் இன்றைய நாள் - எல்லாம் வல்ல எமது மண் ணிலும் சைவமக்கள் வாழும் உலக நாடுகளி லும் நல்லைக் கந்தனை நினைந்து உருகாத வர்கள் இருக்கமாட்டார்கள்.

'எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்தருள்வாய்'

என்று உருகிப் பாடுகிறார் அருணகிரிநாதர்.

நாங்கள் அனைவரும் இந்தநாளில் ஊன் கெட்டு, உயிர்கெட்டு, உணர்வுகெட்டு நல் லைக்கந்தப் பெருமானை வாயார வாழ்த்தி அருள் பெறுவோமாக.

## தேர்த்திருவிழா பக்திப்பாக்கள்

### எழில் நல்லைவாசன்



பல்லவி

*எங்கள் குருநாதன் எழில் நல்லைவாசன்*
*இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன் (எங்)*

அனுபல்லவி

*மங்கள கரமான வாக்யப்ர சாதன்*
*மாறாத மௌன தியானப்ர வேசன் (எங்)*

சரணம்

*அன்பர்கள் சகாயன் ஆனந்தசாகரன்*
*அல்லும் பகலும் நல்லை வீதியிற் சேகரன்*
*என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்*
*இரவும் பகலுமெந்தன் மனத்தினில் தாண்டவன் (எங்)*

*வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும்*
*அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்*
*கஞ்ச மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்*
*பஞ்சா மிர்தம்போ னெஞ்சிற் - ண்புட னினிப்பவன் (எங்)*

-யோகர் சுவாமிகள்

### ஆளும் அரசே! அறுமா முகனே!

சீரும் திறனும் திருவும் பொலியத்
தேரிலி வர்ந்து வரும் திருமால் மருகா
ஊரின் நலனை உதறித் தொடரும்
போரின் கொடுமை புறத்திட் டருள்வாய்!

நல்லைப் பதியின் நவநா யகனே
வெல்லத் தமிழில் உனைவேண் டுகிறோம்
அல்லற் படுமெம் மவரின் துயரைக்
கல்லிப் பெயர்த்தே கருணை புரிவாய்!

சூழும் பகை, போர் துயரச் சிறையில்
நாளும் பொழுதும் நாம்வா டுகிறோம்
மீளும் வழியை விரைவா யருள்வாய்
ஆளும் அரசே அறுமா முகனே!

- சிற்பி.

### நல்லையிற் கயிலைக் காட்சி

**பேரிகை முரசம் கொட்ட**
**பின்னணி தவில் முழங்க**
**வேதியர் வேதம் ஓத**
**விண்ணவர் பூச்சொரிய**
**மாமணி ஒலி கிளப்ப**
**வெண்ணிறச் சங்கு ஒலிக்க**
**ஆதவன் உதித்து வந்து**
**ஆசிகள் பலவும் நல்க**
**ஆழிப் பேரலை யதென்ன**
**அடியவர் ஆர்ப்பரிக்க**
**நாடியே பக்தர் எல்லாம்**
**நல்லைக் குமரனை வியந்துபாட**
**கானமா மயிலை விட்டுக் கந்தன்**
**கனகமா மணித் தேரேறி**
**கயிலை போன்ற சைந்த தேரில்**
**கந்த வேள் வீதி வந்தான்.**

- விகடகவி.

### வினைகள் களையத் தேரேறி வாருமையா!

வல்லைவெளி தாண்டி நல்லைக் கந்தனிடம்
வரவெண்ணி தடைகளிலே நடைபோட்டுப் பயணித்தோம்
நல்லைநகர் கலாசார மண்டபங்கள் துலங்க
நாவன்மை நாற்றிசையும் கந்தனருள் பெற்றுய்ய
தொல்லைகளை வேறுக்க வேல்கூறும் வேதமொடு
தனதுரர்தி பஞ்சநிற இறகுடைய மாயிலேறும்
வல்லவனே! முருகா! வந்தெமைச் சூழகின்ற
வினைகள் களைய தேரேறி வாருமையா!

- அல்லையூர் கே.ஆர்.திருத்துவராஜா.

### இடர்கள் தீர்ப்பாய்

*நல்லூர்க் கந்தா நமையாள் தேவே*
*நல்லநாளில் இன்றுநீ தேரில்*
*இவர்ந்தே வந்து இடர்கள் தீர்ப்பாய்*
*இரு தேவியருடன் இணைந்தே வருவாய்.*

- "உடுவிலூரான்".

### நல்லூர்ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந் திருவிழாவை முன் னிட்டு ஆலயச் சூழ லில் நாவலர் மணி மண்டபத்தில் பிற்ப கல் 3 மணி தொடக் கம் இந்துசமய கலா சார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன் மீக நிகழ்வில் 24ஆம் நாளான இன்று திங் கட்கிழமை 'சைவ வாழ்வு' என்னும் தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் சைவப் புலவர் சு.செல்லத் துரை சொற்பொழி வாற்றுவார். இள வாலை ஒல்லுடை அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை யும் இடம்பெறும்.

அத்துடன்காலை 8 மணிக்கு சைவப் புலவர் கந்தசக்திய தாசன் "வாழ்வியல் திருமுறைகள்" என் னும் தலைப்பில் இசைச் சொற்பொழி வாற்றுவார். மணி மண்டப மாணவர் களின் சிவநடன மும் இடம்பெறும்.

(203-79-111)





உ
நல்லையம்பதிவாசா, நாம் போற்றும் வேலவா
நம்குறை தீர்க்க தேரேறி வாரும் ஐயா,
பயமின்றி வாழ, பன்னிரு கரத்துடன் அருளும் ஐயா
பக்தர்களுக்கு பக்கபலமாக, மயிலேறி வாரும் பரம தயாளா.



சாயிராம் ரேடிங் கம்பனி,
குளிருட்டிகள், குளிர்சாதனப் உதிரிகள் விற்பனையாளர்,
101, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


கு.நித்தியானந்தன்.

நல்லைக் கந்தா! எங்கள் துயர் துடைக்க தேரேறி வாருமய்யா!

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையப் பெற்றிட,
பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான, அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிட - இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

எரிக்கலோஷ்
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலீஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 10.09.2007



## நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழா கண்டு உங்கள் அல்லல் அறுத்திட வாருங்கள்...!

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந் தன் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா நடை பெறுகின்றது. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் அழகிய சித்திரத் தேரிலே அடியார்கள் புடைசூழ ஆரோகணித்து வருகின்ற அற்புதக் காட்சியை இன்று நல் லூரிலே கண்டு களிக்கலாம்.வருகின்ற வல்வினைகளையெல் லாம் வேரோடு களைந்து தம் அடியவர்களுக்கு இன் னருளைத் தருகின்ற வேற்பெருமான் இன்று ஷண்முகப் பெருமானாக ஸ்ரீ வள்ளி தேவசேனா திபதியுடன் அழகிய சித்திரத் தேரிலே எழுந்தருளி வீதி வலம் வந்து அருட் காட்சி தரும் அற்புத நிகழ்வைக் காணக் கண் கோடி வேண்டும்.

'முருகா! உன் பேர ழகைக் கண்டு களிப் பதற்கு அந்த நான்மு கன் பிரமா நலாயிரம் கண் படைத்திலனே' என்று அருணகிரியார் ஆதங்கப்படுவதன் உண்மை இன்று நிரூப ணமாகின்றது.

சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்த நாவலர் பெரு மான் தோன்றியதும் அருளே வடிவான செல் லப்பா சுவாமிகளும் அன்பே வடிவான யோக சுவாமிகளும் நடமா டிய இந்த நல்லூர் மண் மிக விசேடமானது. அத் தகைய பெருமை வாய்ந்த நல்லூர் ஒரு புனித நக ரமாகும். இங்கு தான் திருஞானசம்பந்தர் ஆதீ னமும் இருக்கிறது.

ஸ்ரீ சங்கபோதி புவ னேகபாகுவால் கட்டப் பெற்ற இந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வரு டந்தோறும் ஆடி அமாவாசை வந்து ஆறாம் நாள் கொடியேறி இருபத்தைந்து நாள்கள் நடை பெறு கின்ற மஹோற்சவ விழாக்கள் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன்று நல்லூருக்கு வாருங்கள். தேர் வடம் பிடித்து இழுத்து விண்ணுலகில் ஓரிடம் பிடித்து மனிதப் பிறவியெடுத்ததன் மாண்பினைப் போற்றி பேரானந்தமயமான திருவருட் கடாட்சத்துக்குள் மூழ்கித் திளைத்து உய்தி பெறுவோமாக!

*சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.*


ஓம்



முருகனே கந்தனே முத்துக் குமரனே!
ஒருவனே நல்லூரில் உறைகின்ற உமைசுதனே...
குமரனே கந்தப் பெருமானே எம்மை
காத்தருள தேரேறி வாருமையா...

தேசிய சேமிப்பு வங்கி
உங்கள் குடும்ப வங்கி

NSB

தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்.



தேரேறி வருகின்ற திருக்குமரா!
பாரெல்லாம் பகையின்றி மக்கள் நிறை
அமைதி பெற்றிட அருள் நாடி நிற்கும்



ஆல் நியூ அருண் ஐஸ்கிறீம்

133B, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

ஞாலத்தில் நற்பெயருடன் திகழ்ந்து உங்களை காலங்காலமாக
குளிர்ச்சிக் கடலில் மூழ்கடிக்க உங்கள் அருகில்!

அருண்

தரம், சுவை குன்றாது, சுகாதார முறைப்படி சுத்தமாகத்
தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகைகள்,
குளிர்பானங்கள் இத்தனைக்கும்
யாழ்.குடாநாட்டிலேயே தனித்துவம் மிக்கது!



தேரேறி வரும் முருகையா - எங்களுக்கு தீர்வொன்று தாருமய்யா!

நியூ மிதுரன் ஜுவல்லறி

New Mithuran Jewellary



தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த
தவணையில் செய்து கொடுக்கப்படும்.

T.P.: 077 5958914
அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இல.40, கன்னாதிட்டி வீதி
(மக்கள் வங்கி முன்பாக),
யாழ்ப்பாணம்.



தேரேறி வலம் வரும் முருகா! மக்கள் இன்னல்களை போக்கிடய்யா!



கிருஸ்ணா நகை மாளிகை

Manufacturers of Gold Jewels



கிளை நிறுவனம்
கிருஷ்ணா அடைவு கடை,
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

Krishna Jewellary

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 -222 5046



மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு ஓர் நன்மை

பார்வதித் தாய் பெற்றெடுத்த பால முருகனே! பாரினில் எம்துயர் தீர்க்க தேரேறி வாருமையா!

Valvoline MOTOR OILS

TVS

- ★ 4000 Km வரை பாவிக்கக் கூடியது.
- ★ TVS, Bajah, LML மோட்டார் கம்பனிகளின் அங்கீகாரம் பெற்றது.
- ★ இஞ்சினிற்கு சிறந்த பாவனையைக் கொடுக்கிறது.

மற்றும் Valvoline Forkoil விற்பனைக்கு உள்ளது.
எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முகவர்களுக்கு விசேட
விலைக்கழிவு வழங்கப்படும்.

மீண்டும்
விற்பனைக்கு வந்துள்ளது.
SCOOTY PEP +
TVS Company யின் அங்கீகாரம்
பெற்ற விற்பனை முகவர்.



JIALING 90, PONY மோட்டார்
சைக்கிள்களும் விற்பனைக்கு வந்துள்ளன.

ஏக விநியோகஸ்தர்கள்
யசோ மோட்டார்ஸ்
165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 10.09.2007




தீராத வினைகள் எல்லாம் தீர்ந்துவிடும்
நல்லைக்கந்தன் திருவடியைத் தொழுதுவிட்டால்!

துரித தபால்கள், பொதிகள் சேவை

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணி நேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL MONEY TRANSFER

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டேஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)


## தமிழே முருகன் - அவனே மக்கள் தெய்வம்

தமிழ்மொழியிலுள்ள வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் ஆறையும் முருகனின் ஆறுமுகங்களும், உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டை பன்னிரு தோள்களும், மெய்எழுத்துக்கள் பதினெட்டை முருகனின் பதினெட்டுக் கண்களும், மூன்று புள்ளிகளைக் கொண்ட ஆயுத எழுத்தை இச்சா, கிரியா, ஞான சக்திகளைக் கொண்ட வேலாயுதம் குறித்து நிற்பதாகவும் கூறும் செந்தமிழ் சான்றோர், முருகனே தமிழ் என்னும் தமிழே முருகனென்றும் வாதிட்டு நிற்பர்.

இவர்களின் கூற்றுக்கு மேலும் வலிமையூட்டுவதாக அமைந்து விளங்குவது திருமுருகனே. தமிழையும், சைவத்தையும் வளர்த்தற் பொருட்டு இப்பூவுலகில் திருஞானசம்பந்தப் பெருமானாக அவதரித்தார் எனும் செய்தியாகும். இதற்கான ஆதாரங்களை நம்பியாண்டார் நம்பியினதும், அருணகிரிநாதரினதும், ஒட்டக்கூத்தரினதும் பாடல்களில் கண்டு தெளியலாம்.

தனிப்பெருந் தமிழ்த் தெய்வமாகத் திராவிடத் தெய்வமாக விளங்கிய நம்முருகன் ஆரியத் தெய்வமுமாகி இன்று பௌத்தர்களின் ''கதிரகம தெய்யோ'' வாகியும் இன, மத ஒருமைப்பாட்டின் சின்னமாகவும் விளங்கி நிற்பது கண்கூடு. பண்டைய இலக்கியங்களிலே மலையுறை தெய்வமாகச் சிறப்பிக்கப்படும் நம் முருகனானவன் ஆறுபடை வீடுகளில் மட்டுமன்றி, காடுகளிலும், சோலைகளிலும், சந்திகளிலும், குளங்களிலும், கடம்பமரத்திலும் ஊர்கள் தோறும் அமர்ந்திருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். தன்னை நாடி அடியவர்கள் வரும் வரை காத்திருக்காது அவரிடம் தேடிச் சென்று அருள் புரியும் தன்மை வாய்ந்தவன். இதனையே திருப்புகழ் - **''மாசிலடியார்கள் வாழ்கின்றவூர் சென்று தேடி விளையாடியே யங்ஙனை நின்று வாழு மயில் வீரனே''** என்று போற்றி நிற்கின்றது.

விண்ணகப் பெண்ணாக தெய்வயானையை மட்டுமன்றி மண்ணகப் பெண்ணான வள்ளியையும் மணந்து மக்கள் தெய்வமாகி, மண்ணவர் குறைபோக்கியருள் செய்யும் முருகப் பெருமானே முத்தியளிக்கும் வித்தகன். இதனாலேயே கந்தபுராணம் அவனருள் பெறாது முத்தியடைந்தாரில்லை எனக் கூறுகின்றது. முருகனை நாடி நிற்போருக்கு மறுபிறப்பென்பது ஒருபோதுமேயில்லை.

பேரொளி வடிவினனாக விளங்கும் முருகனின் கைவேல் தவறிழைப்பவரின் உயிர்களைப் பறிக்கும் வேலன்று; அவர்களது அறியாமை இருளை அகற்றி, அறிவொளி ஊட்டி விடும் தன்மை வாய்ந்தது. அறியாமை காரணமாக மாறுபட்டு நின்ற சூரனை அழிக்காது, அவனது உயிரைப் பறிக்காது அவனது அறியாமையை அகற்றி தனது சேவற்கொடியாகவும், மயில் வாகனமாகவும் விளங்கும் நற்பேற்றினை அளித்தருளிய நிகழ்வு இதற்கு நல்லதோர் ஆதாரமாகும்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேற் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்பது உறுதி.

வேலாயுதத்திற்கு மேல் எமைக்காக்கும் வேறாயுதம் ஏதுமில்லை என்பதை நன்கு உணர்ந்து வேல் வடிவில் குடியிருக்கும் நல்லைக்கந்தனை நமோ குமாராய, சரவணபவ எனும் மந்திரங்களை உச்சரித்தும், பாமாலை பாடியும், பூமாலை சாத்தியும், பணிந்தும் பாவங்கள் அத்தனையும் தொலைத்து, அச்சமின்றி அறிவுகொண்டு வாழ்வோமாக.

வேல் வேல் வெற்றிவேல்! சூரவேல்! ஞானவேல்!




அதிகம் சேமித்து அதிகம் பெற்றிடுவீர்

ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டு அல்லது மூன்று பரிசுகளிலிருந்து ஒன்றை தெரியுங்கள்

நல்லூரான் திருவடியை நாடிடுவோம்
எல்லோரும் அவன் புகழைப்பாடிடுவோம்
மெய்யன்போடு அவன்பாதம் தொழுதிடுவோம்
தென்போடும் அன்போடும் நிம்மதியாய்
வாழ வாழ்த்திடுவோம்.

நல்லூர்க் கந்தனின் இத்தேர்த்திரு நன்னாளில்
உங்கள் அனைவருக்கும் அன்புடன்
அரவணைக்கும் செலான் வங்கியின்
மனம் நிறைந்த வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்களின் பெறுமதியான தங்கம்/ஆபரணங்களுக்கு பாதுகாப்பு ...

செலவுக்குத் தேவையான பணம்...

செலான்
தங்க நகை அடகுச் சேவை...

★ குறைந்த வட்டிக்கு அதிக முதல்
★ பகுதிக் கொடுப்பனவு வசதி
★ உங்களின் முத்திரைக் கட்டணம் வங்கியினால் செலுத்தப்படும்
★ துரித சிறப்பான சேவை
★ குறைந்த பரிமாற்ற காலம்
★ பூரண இரகசியத் தன்மை

கொடுக்கல் வாங்கல் நேரம்:
வார நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை
சனிக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை

செலான் டிக்கிரி கணக்கு முன்னரிலும் பார்க்க மேலும் பல புதிய பரிசுகளை உங்களுக்கு வழங்குகிறது.

சேமிப்பு அதிகரிக்க பரிசுகளும் அதிகரிக்கும். பரிசுகளாக வைர பென்டன், Vtech கொம்பியூட்டர், மெலோடிகா, பற்றறியில் இயங்கும் கார், ரேடியோ கசெட் பிளேயர், தங்க ஆபரணம், டிஸ்க்மன், சிறுவர் கைக்கடிகாரம், புத்தகப்பை, விளையாட்டுப் பொருள்கள், swatch ஸ்போட்ஸ் வோச், இலெக்ரிக் ஓர்கன், DVD பிளேயர், அன்பளிப்பு வவுச்சர் எல்லாம் கிடைக்கும்.

ஒரு பவுனுக்கு ரூபா 15,250/= பணக்கொடுப்பனவு

* நிபந்தனைக்கு உட்பட்டது.

டிக்கிரி ஆனந்த மகிழ்ச்சி தரும் நற்பழக்கம்

செலான் வங்கி
இல. 560&562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3047, 222 3755

செலான் வங்கி






"நல்லூரின் நாயகனே! ஞானவடிவேலனே! எல்லோரும் கண்டின்புறவே அருட்காட்சி தாராய்!"

வாணி ரெக்ஸ்

Specialist in Wedding Sarees & Shalwar Kameez

81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 - 2225578

81, Grand Bazar, Jaffna. Tel.: 021 2225578




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கப்பலில் ஏற்றுபவர்களுக்கான அன்பான வேண்டுகோள்

### பொருள்களை ஏற்றுவதற்கான பாரவூர்திகள் வழங்கல்

எமது சங்கம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிப் பறிப்பதனால் பாரவூர்திகளினை ஒழுங்கு படுத்தி வழங்குவதில் பல சிரமங்களினை எதிர்நோக்கியுள்ளது. இதன் காரணத்தினால் உள்ளூர் உற்பத்திகளை கப்பலில் ஏற்றுபவர்களுக்கு பாரவூர்திகள் சில நாள்களாக வழங்கப்படாமல் இருந்தது. எனவே உள்ளூர் உற்பத்திகளை கப்பலில் ஏற்ற விரும்புபவர்கள் தமக்குத் தேவையான பாரவூர்திகளை 5 நாள்களுக்கு முன்னதாக சங்கப் பணிமனையில் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி/53619) -நிர்வாகம்.

## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# அறிவித்தல்

## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20. 2இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக்கூட்டம் பின்வரும் இடங்களில் 16.09.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும் என யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை சகல உறுப்பினர்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| கி.இல. | கிளைப்பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 254 | தம்பாலை | யாழ்.கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம் |
| 255 | வல்லை | தலைமைக்காரியாலயம், அச்சுவேலி பனை தென்னை வ.அ.கூ.சங்கம் |
| 256 | நெருப்புமூட்டி | யாழ்.ஆவரங்கால் மகாஜெனா வித்தியாலயம் |
| 257 | கருங்காலி | தலைமைக்காரியாலயம், அச்சுவேலி பனை தென்னை வ.அ.கூ.சங்கம் |
| 258 | ஆவரங்கால் | சர்வோதயா முன்பள்ளி, ஆவரங்கால் மேற்கு |
| 259 | கிழக்குப் புத்தூர் | சரஸ்வதி முன்பள்ளி, புத்தூர் கிழக்கு |
| 260 | வங்கியடி | லிங்கன் சனசமூக நிலையம், ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் |
| 261 | கிந்துசிட்டி | கிந்துசிட்டி தொழிற்சாலை, சுன்னாகம் வீதி, புத்தூர் |
| 262 | சிறுப்பிட்டி | ஜனசக்தி சனசமூகநிலையம், சிறுப்பிட்டி மேற்கு |
| 264 | பன்னாலை | கலைமகள் சனசமூக நிலையம், பன்னாலை, சிறுப்பிட்டி |
| 265 | வடக்குவெளி | சரஸ்வதி சனசமூக நிலையம், நவக்கிரி, புத்தூர் |

சி.சந்திரலிங்கம்,
கௌரவசெயலாளர்
(64626) அச்சுவேலி பனை தென்னை வள அ.கூ.சங்கம் (வ-து)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

914 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

07 11 13 49

விருச்சிகம்

07-09-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5161122 - 5176377

ஜக்பொட் பரிசு ரூபா. 1,757,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 333,951 | 10/- | 3,339,510/- |
| 2 இலக்கங்கள் | 30,699 | 20/- | 613,980/- |
| 1 இல. + லக்கினம் | 30,430 | 30/- | 912,900/- |
| 2 இல. + லக்கினம் | 2,785 | 100/- | 278,500/- |
| 3 இலக்கங்கள் | 824 | 500/- | 412,000/- |
| 3 இல. + லக்கினம் | 68 | 5,000/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,757,000/- | 1,757,000/- |
| மொத்தம் | | | 8,053,890/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 398,767 | | 9,077,390/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4364957 க்கு மேற்பட்ட நல்ல நிற டிக்கட்டுக்கள் 2007 செப்டம்பர் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 5175851-9-17 |
| மாத்தளை | 5173078-6-33 |
| கொழும்பு | 5173665-3-15 |
| பதுளை | 5165309-8-13 |
| காலி | 5174707-8-82 |


## தவறிவிட்டது

உடுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஆனந்த ஜேஸ்கரன் என்பவருடைய தே.அ.அட்டை (681911960V), வீசேட அ.அ.அட்டை (0206000802), சாரதி அனுமதிப்பத்திரம், வேலை அனுமதி அட்டை என்பன அடங்கிய கைப்பேசுடன் ஆனைப்பந்திக்கும், யாழ். மையப்பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை, லிங்கம் மண்டபம் (2ஆம் மாடி) என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (64663)

## தவறிவிட்டது

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த செல்லத்துரை ஜெயக்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (813524856V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.


## விமானசேவை

கொழும்பு - யாழ். - கொழும்பு

தினசரி விமானசேவை

மீண்டும் நான்கு பயணிகள்

பயணம் செய்யக்கூடிய சிறிய விமான சேவை ஆரம்பம். உங்கள் பொதிகளும் பூதவுடல்களும் உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

EURO GROUP COMPANIES
35, STATION ROAD, MOUNT LAVINIA
TEL.:0114 542190, 077 3846998 FAX: 0114 542360
11, VIHARA LANE COL.,06.
TEL.:0114961196, 077 3561891
22, WYMEN ROAD, NALLUR, JAFFNA.
TEL.:021 222 3974, 077 4207963.
(C/53620)


## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவம், 1976இல் பிறந்தவர் (ஆண்) 5' 7" உயரம், அழகிய தோற்றம், B.Sc. பட்டதாரி, அரச உத்தியோகம், பூரட்டாதி (3) கிருகபாவம் 23, செவ்வாய் தோஷமற்றவர். இவருக்கு ஆசிரியை / உயர் கல்வியுடைய அழகிய மணமகள் எதிர்பாக்கப்படுகிறது.

யாழ்.இந்துகௌரவம், 1978இல் பிறந்தவர் (ஆண்) சைவபோசனம், 5' 10" உயரம், திருவாதிரை, 65கிரகபாவம், 7இல் செவ்வாய், தனியார் கம்பனியில் உயர்பதவி வகிக்கும் B.Sc.பட்டதாரிக்கு சைவபோசனமும், உயர் கல்வியும் உள்ள மெல்லிய ஆழகிய மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.இந்து கௌரவம், 1981இல் பிறந்தவர் (பெண்) 5' 4" உயரம், ரேவதி நட்சத்திரம், 62 கிரகபாவம், 8இல் செவ்வாய் உள்ள அழகிய MBBS டாக்டருக்கு MBBS டாக்டர் மணமகன் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்பு:
த.சிவானந்தன்,
பிரபலசோதிடர்
5, வைமன் வீதி - நல்லூர், யாழ்ப்பாணம்.

## வான் விற்பனைக்கு

TOYOTO REGUIESE
HX - XXXX
தனிப் பாவிப்பிலுள்ளது.
7 ஆசனம் கொண்டது.
T.P.: 021 226 3217
021 226 4648
0777 422604
(64640)

## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ISUZU ELF அலுமினிய பொடி, $14\frac{1}{2}'$ நீளம் HA XXXXதொடரிலக்கமுடைய லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
226 3217, 226 4648
0777 422604
(64639)

## மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த 37 வயது, அரச உத்தியோகம், செவ்வாய்க்குற்றம் அற்ற பாவம் குறைந்த மணமகனுக்கு, படித்த அழகான 32 வயதுக்குக் கீழ்பட்ட மணமகள் தேவை.
தொடர்பு:
0776216067
விளம்பர இல. 3008
மே/பா, உதயன்.
(64671)

## கிணறு புனரமைப்பு

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயக் கிணறு சேவா லங்கா நிறுவனத்தினரால் புனரமைக்கப்படவுள்ளது.

மாணவர்களின் நலன் கருதி அதிபர் விடுத்த வேண்டுகோளையடுத்துக் கிணற்றின் மேற்பகுதிக்கு பாதுகாப்புவலை, இருபக்கத் தூண்களின் கப்பி வசதி உட்பட புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (207)

## அறிவித்தல்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற எல்லைக்குள் இயங்கித் தற்போது தற்காலிகமாகப் பூட்டப்பட்டுள்ள வணிக நிலையங்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் 15.09.2007 இற்கு முன்னர் மன்ற ஆலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
கைத்தொழில் வணிகர்மன்றம், சாவகச்சேரி.
(சி/53612)

## ICRC

We are looking for experienced and committed **Driver** to join our team in Jaffna. Apart from driving, he will also act as translator to expatriate delegates as and when required in the field.

**Job description:**

- Drive (4-WD vehicle) in any part of the country.
- Carry out basic maintenance.
- Serve as a translator between the delegates and interlocutors.
- Use VHF/HF radios to keep in touch with base at all times.

**Qualifications:**

- Good communication skills.
- Five years of professional experience as a Driver, preferably with working experience in NGOs.
- Fluent in Tamil and English. Knowledge of Sinhala will be an asset.
- Excellent driving skills... ( 4WD vehicles) with a valid Sri Lankan driving licence (Class A). . Mechanical Knowledge will be an asset

**Qualities required:**

We are looking for candidates with strong commitment to humanitarian work. They must demonstrate capability to work independently and show initiative. Flexibility and good team spirit considered as essential assets for the candidates. The candidates should have a good knowledge of the roads in North and East. The ICRC offers a competitive salary and social benefits.

Date of Employment: Immediate
Duration: Initially for six months and renewable.
Only Candidates meeting the above mentioned criteria will be considered.


Candidates with proper qualifications should forward a covering letter, their complete CV with all previous work experience, copies of certificates, references and contact telephone number on or before 21 September 2007 to:

The Administrator,
ICRC,
120 Temple Road, Jaffna.
(C/53601)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 01 - 06 - 1959

உதிர்வு 29 - 07 - 2007



அமரர்

## துரைச்சாமி தனபாலசிங்கம் (தனம்)

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குபற்றி ஆறுதல்கூறி இறுதிக்கிரிகைகளிலும் கலந்துகொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் நாளை (11.09.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புக்கரம் கூப்பி அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி. (64660) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ்க் கூட்டமைப்பினரிடம் இன்னும் ஊக்கம் வேண்டும்

நாடு மிக முக்கியமானதொரு கால கட்டத்தில் நிற்கின்றது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அரசியல், இராணுவ, சமூக விவகாரங்களில் மிகச் சிக்கலானதொரு நேரத்தைத் தமிழினம் கடக்கும் வேளை இது.

இந்தச் சமயத்தில் தேசிய ரீதியில் தமிழரினத்தின் ஜனநாயகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தலைவர்களின் செயற்பாடும் போக்கும் சர்ச்சைக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியிருக்கும் நெருக்கடியான சந்தர்ப்பம் இது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் 24 பிரதிநிதிகளில் 22 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். மற்றைய இருவரான அரசுடன் இணைந்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரை ஒத்த தி.மகேஸ்வரன் எம்.பியும் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிப்பவர்கள் என்று கூறமுடியாது. அவர்களை விட்டுவிடுவோம்.

இந்த 24 பேரையும் விட, முஸ்லிம்கள் தவிர்ந்த ஏனைய தமிழ் பேசும் எம்.பிக்களில் மனோ கணேசன் நீங்கலாக - இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் முதல் கொண்டு மலையக மக்கள் முன்னணித் தலைவர் அமைச்சர் பெ. சந்திரசேகரன் வரை - அனைவருமே, பேரினவாதத்தில் ஊறித் திளைத்துக் கிடக்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்குக் கூசா தூக்கும் இந்தச் சமயத்தில் -

ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையும் பொறுப்பும் இரட்டிப்பாகின்றன.

தமிழினத்தின் இராணுவ, அரசியல் போராட்ட சக்திகளான புலிகள் தங்கள் பொறுப்பை உயிரைத் துச்சமென மதித்து ஆற்றி வரும் வேளையில் -

மறுபுறத்தில் புலிகளுக்கு பக்கத் துணையாக ஜனநாயக அரசியலில் பெரும் சக்தியாய் எழுச்சிபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்.

மட்டக்களப்பில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்- தேவாலயத்துக்குள் - கிறிஸ்மஸ் ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஜோஸப் பரராஜசிங்கம் எம். பி. சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கொடூரமும் -

கொழும்பில் பல இராணுவ - பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு மத்தியில், பட்டப்பகலில், நட்ட நடு வீதியில் வைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரமும் - தமிழர் மனதை ஆழமாகக் குடையும் வேதனைகள்.

இத்தகைய ஆபத்துகளுக்கு மத்தியில்தான் பணிபுரிய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள்.

ஒருபுறம் மட்டக்களப்பிலோ, அம்பாறையிலோ, திருகோணமலையிலோ, வவுனியா - மன்னாரிலோ, யாழ்ப்பாணத்திலோ தமது சொந்தத் தொகுதிகளுக்குக் கூடச் செல்லமுடியாத பாதுகாப்பு இக்கட்டில் அவர்கள் சிக்கிக் கிடக்கின்றார்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியைத் தவிர பிற எந்த இடங்களுக்கும் -அரச கட்டுப்பாட்டில் உள்ள எந்தப் பிரதேசத்துக்கும் - சுமுகமாகச் சென்றுவர முடியாத பெரும் சிக்கலிலேயே அவர்கள் உள்ளார்கள் என்பது வெள்ளிடைமலை.

கொழும்பில் இருப்பதும் அவர்களுக்குச் சிக்கல்தான். அதனால் கொழும்பில் ஒரு காலும் வெளிநாடுகளில் வாழ்வுமாக அவர்களில் பலர் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தச் செயற்பாட்டை நியாயப்படுத்துவதற்கு வெளிநாடுகளில் தமிழரின் விடுதலைப் போராட்ட எழுச்சி குறித்து பிரசாரம் செய்கிறோம் என்ற சாக்குப்போக்கு வேறு முன்வைக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்துக்கு முன் அனுமதியின்றி மூன்று - மாதங்கள் தொடர்ந்து சமுகம் தராவிட்டால் எம்.பி.பதவி காலியாகிவிடும் என்ற ஒழுங்குவிதி இருப்பதனால், என்னவோ மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றப் புத்தகங்களில் கையெழுத்துப் போடுவதற்காகவேனும், கொழும்பைத் தமது சர்வதேசப் போக்குவரத்துக்கான மைய இடைநிலைத்தளம் (Transit Place) ஆகப் பயன்படுத்தும் விதத்திலேனும் சில கூட்டமைப்பு எம். பிக்கள் அவ்வப்போது கொழும்பைத் தரிசித்துச் செல்லத் தவறவில்லை.

இப்படி பிறநாட்டில் தமிழர் போராட்டப் பிரசாரம் என்று பெட்டியைத் தூக்கிக்கொண்டு சதா பயணத்தில் இருக்கும் பல எம். பிமாருக்கு, தமிழர் தாயகத்தில் மக்களின் அவலநிலை தொடர்பான அடிப்படைப் புள்ளி விவரங்கள் கூடத் தெரிவதில்லை. இந்தச் சீத்துவத்தில் ஈழத் தமிழர்கள் சார்பாக இவர்கள் ஆக்கபூர்வமான என்ன பிரசாரத்தை முன்னெடுப்பார்கள் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

போதாக்குறைக்கு நாடாளுமன்றத்தில் அரசுக் கவிழ்ப்பு முயற்சியிலிருந்து, அரசுக்கு சார்பான நிதிச் சட்டங்களை நிறைவேற்றுகின்ற விவகாரம் வரை - 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் இந்த 22 பேர் அணியை - எந்தத் தரப்புமே ஒரு பொருட்டாக மதிக்காத நிலையும் காணப்படுகின்றது.

கைதுசெய்யப்படுவோரை பொலிஸார் 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றில் ஆஜர் செய்யவேண்டும் என்ற குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை அண்மையில் திருத்தப்பட்டது. கைதுசெய்யப்படுவோரை 48 மணிநேரம் தடுத்து வைக்கும் அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கும் விதத்தில் அச்சட்டம் திருத்தப்பட்டது. அந்தத் திருத்தத்தால் அதிகம் பாதிக்கப்படப் போகின்றவர்கள் இன்றைய கட்டத்தில் தமிழரே என்பது தெளிவு. ஆனால் இச்சட்டத்திருத்தம் மீதான வாக்கெடுப்பின் போது - அதை ஜே. வி. பி. முதற்கொண்டு ஐ. தே. கட்சிவரை எதிர்த்து வாக்களித்தபோதும் - அதை அடையாளத்துக்குத் தன்னும் எதிர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 எம். பிக்களில் ஒருவர் கூட நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை.

அரசுக்கு எதிரான விடயங்கள் வாக்கெடுப்புக்கு வரும் சமயங்களில், அதை எதிர்த்து வாக்களிக்கத் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றில் இருக்கமாட்டார்கள் என்று பகிரங்கமாகக் கூறிக் கணக்குப் போடுகின்றார் அரசுத் தரப்பின் பிரதம கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே.

அதேசமயம் அரசைக் கவிழ்க்கும் முயற்சியா, கூட்டமைப்பினரை எங்களுக்கு ஆதரவாக ரிரான் அலஸ் கூட்டிவருவார் என்று எதிர்க்கட்சித் தலைவர் கணக்குக் காட்டுகின்றார்.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினதும் போடுதடி போல கூட்டமைப்பினர் இருக்கின்றனரே தவிர, தமிழரின் அரசியல் போராட்டத்தில் ஓர் ஜனநாயக அதிர்வை (Vibrant) ஏற்படுத்துகின்ற உந்து சக்தியாக அவர்கள் இல்லை என்ற பலவீனம் தோற்றுகின்றது.

விடுதலைக்காக வீறுகொண்டெழுந்த இனத்தின் பிரதிநிதிகள் என்ற ஆவேசம் இவர்களிடம் அடங்கிப்போய்விட்டதா என்று எண்ணும் நிலையைத் தோற்றுவிக்காமல் ஊக்கத்துடன் செயலாற்றும் பொறுப்பு இன்று அவர்களுக்கு உண்டு. வரலாற்றுக் கடமையை ஏற்றவர்கள் பலவீனத்தில் தூங்கிவிட முடியாது. தூங்கிவிடக் கூடாது.

# வதிரியில் முகமூடிக் கொள்ளையர் ஊரடங்கு நேரம் அட்டகாசம்!

## வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டு, கத்திக்குத்து

உடுப்பிட்டி,செப்.10

நெல்லியடி - வதிரிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு, பயங்கர ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் புகுந்த முகமூடி அணிந்த 30 இற்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று குடியிருப்பாளர்களை வெட்டியும் குத்தியும் தாக்கியது. பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது.

இச்சம்பவத்தின்போது கொள்ளையரை எதிர்த்து நின்ற கிராம சேவையாளர் ஒருவர் உட்பட இருவர் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணி தொடக்கம் 10 மணிவரை நெல்லியடியிலிருந்து வதிரிவரையுள்ள சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இவ்வீதியில் உள்ள, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி வதிரிச் சந்தியைத் தாண்டி நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை வரையுள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் கொட்டன், கத்தி, வாள், கோடரி போன்ற வகை வகையான ஆயுதங்களுடன் அடுத்தடுத்து வீடுகளுக்குள் புகுந்தவர்கள் வீடுகளையும் மோட்டார் சைக்கிள்களையும் அடித்து நொறுக்கி சேதமாக்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி வீட்டுச் சொந்தக்காரர்களையும் கூரிய ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தியும் ஒவ்வொரு வீடுகளிலும் 50 ஆயிரம் தொடக்கம் 6 முதல் 7 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்தும் சென்றுள்ளனர்.

### வர்த்தகரை அடித்து இருத்தினர்

வதிரிச் சந்தியில் உள்ள கடை உரிமையாளரான கனகராசா ரவிச்சந்திரன் (வயது 63) என்பவரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி கூரிய ஆயுதங்களால் அவரைத் தாக்கி பயமுறுத்தி நிலத்தில் இருக்க வைத்துவிட்டு, அவரது மோதிரத்தையும், மகளின் சங்கிலியையும் கழற்றிக்கொண்டு சென்றுள்ளது. இவருக்கு இடது பக்க இடுப்பிலும் இடது கையிலும் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வீட்டுக்கு அண்மையில் உள்ள புலோலி வடமேற்கு கிராம சேவையாளர் சபாரத்தினம் நாகதீபசோதிரூபன் (வயது 50) என்பவரது வீட்டுக்குச் சென்ற கொள்ளைக் கோஷ்டி கதவை உடைத்து உள்ளே சென்றபோது கொள்ளையர்களை அவர் எதிர்த்துப் போராடினார். அப்போது தலையிலும் இடது கை மணிக்கட்டிலும் பலத்த வெட்டுக்காயத்துக்குள்ளானார். அவ்வேளையில் அவரது மனைவியின் கழுத்தில் இருந்து தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

இவரது வீட்டுக்குக் கொள்ளைக் கோஷ்டியினர் மீண்டும் வந்தபோது பலத்த காயங்களுக்கு மத்தியிலும் கதவை அடைத்து எதிர்த்துப்போராடவே கொள்ளையர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

### கர்ப்பிணிப் பெண்ணிடம் தாலிக்கொடியைப் பிடுங்கினர்

அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற கொள்ளையர் கர்ப்பிணிப் பெண் அணிந்திருந்த தாலிக் கொடியைத் தருமாறு மிரட்டினர். அப்பெண் கொடுக்க மறுக்கவே அவரது வயிற்றில் காலால் உதைத்தனர்; அவரைத தாக்கினர். அப்போது அவரது கணவரை கத்தி முனையில் மிரட்டி வைத்திருந்தனர்.

அதனையடுத்து அப்பெண் தாலியைக் கழற்றிக்கொண்டு கொடியைக் கொள்ளையரிடம் எறிந்தார்.

இச்சம்பவங்கள் குறித்து அறிய வந்ததும் அயலவர்கள் கரவெட்டிப் பிரதேச செயலர், பருத்தித்துறை பதில் நீதிவான் ஆகியோருக்கு தகவல் தெரிவித்தனர். இதுவிடயம் பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் உடனடியாக நெல்லியடிப் பொலீஸாருக்குத் தகவல் தெரிவித்ததன் பேரில் பொலீஸார் சம்பவ இடங்களுக்கு உடன் விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். அதேவேளை, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை, வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் வண்டிகளும் அங்கு வந்து சேர்ந்தன. அவற்றில் படுகாயமடைந்தோர் இரவு 11.30 மணியளவில் கூட்டிச்செல்லப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

### நீதிவான் பார்வையிட்டார்

நேற்றுக்காலை சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் சம்பவ நடந்த வீடுகளைப் பார்வையிட்டார். விசாரணைகளை நடத்தினார். அப்பகுதி இராணுவ அதிகாரிகளை அழைத்து நீதிவான் கலந்துரையாடினார்.

சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிவான் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

அதன்பின் படையினர் வதிரிச்சந்தி, மாலு சந்தி, முத்துமாரியம்மன் ஆலய பகுதி, டயமன் விளையாட்டுக் கழகம் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

சிலரின் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்ட படையினர் அவர்களை முகாமுக்கு வருமாறு பணித்துச் சென்றனர். (அ-1-160-155)

# அதிபர், ஆசிரியர்கள் வியாழனன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்

இலங்கை முழுவதிலும் எதிர்வரும் வியாழக்கிழமை அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளவதென ஆசிரியர்களின் ஐந்து தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

அதிபர், ஆசிரியர்களுக்கான இடைக்கால சம்பள அதிகரிப்புத் தொடர்பாக கல்வி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வேலைநிறுத்தம் தொடர்பாக அறிக்கை வெளியிடப்பட்டது.

ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கம், கல்வி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், விவசாய - மனையியல் டிப்ளோமா ஆசி ரியர் சங்கம் ஆகிய ஐந்து சங்கங்களின் நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

ஐந்து சங்கங்களின் ஒருமித்த தீர்மானமாக 13ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. (அ-1-11)

# அத்தாஸிற்கு முழு அளவில் பாதுகாப்பு உடன் வழங்க ஏற்பாடு செய்க

## ஜனாதிபதியை வற்புறுத்துகிறது அமெரிக்கா

கொழும்பு,செப்.10

பாதுகாப்புத்துறை விமர்சகரும் பத்திரிகையாளருமான இக்பால் அத்தாஸிற்கு உடனடியாக முழு அளவில் பாதுகாப்பு வழங்குமாறு அமெரிக்க அரசு வற்புறுத்தியுள்ளது.

அமெரிக்க மூதவையின் (செனேட்) வெளியுறவுக் குழுவின் தலைவர் ஜோசேப் பிடன்(ஜூனியர்) இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இக்பால் அத்தாஸிற்குப் பாதுகாப்பு அளிக்குமாறு வற்புறுத்தியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 4ஆம் திகதி எழுதப்பட்டிருக்கும் குறித்த கடிதத்தின் பிரதியொன்றை அத்தாஸ் குடும்பத்தினரிடமிருந்து பெற்று கொழும்பு ஊடகம் ஒன்று பிரசுரித்துள்ளது.

அத்தாஸிற்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பும் பொலீஸ் கண்காணிப்பும் உடனடியாக மீள வழங்கப்படவேண்டும் என்று வற்புறுத்துகின்றோம் - என்று ஜோசப் பிடன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்தாஸ் புலனாய்வு கட்டுரைகளை எழுதிவருவதால் அவ்வப்போது உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகி வந்துள்ளார். அவர் மீது கொலை முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டதை அடுத்து 1998ஆம் ஆண்டு அரசாங்கம் அவருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்தது. அவரது வீட்டின் வாயிலில் பொலீஸார் காவலுக்கு நிறுத்தப்பட்டதுடன் அவர் மேற்கொள்ளும் பிரயாணங்களின்போது பாதுகாவலர்கள் உடன் சென்றுவந்தனர். ஆனால் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் கடந்த மாதம் திடீரென நீக்கப்பட்டன.

இதேவேளை -

அத்தாஸிற்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு வாபஸ்பெறப்பட்டமை குறித்து எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கத் தூதரகங்களுக்கு கவலையும் அங்கலாய்ப்பும் தெரிவித்து எழுதியுள்ள கடிதத்தில் மீண்டும் அவருக்குப் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருந்தது.

அத்தாஸிற்கும் அவரது நண்பர்களுக்கும் ஏதாகிலும் சம்பவிக்குமானால் ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவுமே பொறுப்பானவர்கள் என்று பத்திரிகையாளர்களால் குற்றஞ்சாட்டப்படுவார்கள் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-ப)

| நாளை | |
|---|---|
| ஆவணி - 25 | செவ்வாய்க்கிழமை |
| | 11.09.2007 |
| திதி : | அமாவாசை |
| | மு.இ. 06.27 |
| நட்சத்திரம் : | பூரம் மு.இ. 11.30 |
| சுபநேரம் | : 10.33 - 12.03 |
| ராகுகாலம் | : 03.03 - 04.33 |

# குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று திடீர் மழை; கைதடியில் மின்னல் தாக்கி இளைஞன் மரணம்!

கைதடி,செப்.10

குடாநாட்டில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் திடீரென இடி மின்னலுடன் மழை பெய்தது.

மின்னலால் தாக்குண்ட கைதடிப் பகுதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் இருவர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் குடாநாடு முழுவதிலும் பெரும் இடி மின்னலுடன் மழை பெய்தது. மின்னல் காரணமாக பல இடங்களில் பாதிப்பு ஏற்பட்டது.

கைதடி வடக்குப் பகுதியில் வேட்டைக்குச் சென்ற மூவர் இடி மின்னல் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு இருவர் எடுத்துவரப்பட்டனர். அவர்களில் தங்கவேலு அலக்சன்(வயது 20) என்பவர் அங்கு மரணமானார். ரி.மகிராஜ்(வயது 17) என்பவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார். மூன்றாமவருக்கு பெரும் பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கைதடி தெற்கில் ஜெயகௌசல்யா(வயது 21) என்ற இளம் பெண் இடி மின்னல் காரணமாக அதிர்ச்சியுற்று மயக்கமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய், மடத்தடியிலும் வீடு ஒன்றின் மீது இடி விழுந்து தாக்குதலுக்குள்ளாகிச் சேதமடைந்தது. வீட்டில் இருந்த இலத்திரனியல் கருவிகள் யாவும் செயலிழந்தன. வீட்டில் ஆள்கள் இருந்தபோதும் அவர்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-75-78)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் அருவியாற்றுக் கரையில் இரு சடலங்கள் இருப்பதாக தகவல்

## காணாமற்போனவர்களுடையவை எனச் சந்தேகம்

மன்னார்,செப்.10

முருங்கன் - சிலாவத்துறைக்கு அப்பால் அருவியாற்றுக் கரையில் இருவரின் சடலங்கள் காணப்படுவதாக மன்னாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவை, கடந்த முதலாம் திகதி முசலி, பிச்சைவாணிபன் குளம் காட்டுப்பகுதிக்கு வேட்டைக்குச் சென்று காணாமற்போன இருவரின் சடலங்களாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சிலாவத்துறையை நோக்கி படையினர் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த, கடந்த முதலாம் திகதி நால்வரும் இந்தக் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றிருந்தனர்.

அவர்களில் இருவர் வீடு திரும்பினர். காணாமற்போன மற்றவர்களைத் தேடிய போதிலும் பலன் கிடைக்கவில்லை.

அருவியாறுக் கரையில் கிடப்பதாக கூறப்படும் சடலங்கள் காணாமற்போனவர்களுடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

(அ-1)

# வவுனியாவில் ஆணின் சடலம் எரிந்த நிலையில் கண்டுபிடிப்பு

## அருகில் ரி-56 இயந்திரத் துப்பாக்கி மீட்பு

கொழும்பு, செப்.10

வவுனியா கந்தபுரத்திலுள்ள குளத்து மேட்டுக்கு அருகில் நேற்று அதிகாலை 6 மணியளவில் 30 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் எரியுண்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டிருக்கிறது. எனினும், சடலம் அடையாளம் காணப்படவில்லை.

அதிகாலை 12.30 மணியளவில் அப்பகுதியில் ஏதோ எரிக்கப்பட்டது என்ற தகவல் பொலிஸாருக்கப் பின்னர் தெரியவந்தது.

அதையடுத்து சம்பவஇடத்திற்கு பொலிஸார் அதிகாலை 6 மணியளவில் சென்றனர். அங்கு எரியுண்ட நிலையில் சடலம் ஒன்றையும் அதற்குப் பக்கத்தில் ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் அவர்கள் கண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் சம்பவ இடத்திற்கு 350 மீற்றர் தூரத்திலுள்ள இராணுவ முகாமிலுள்ள முகாம் பொறுப்பதிகாரியும் இராணுவ அதிகாரி ஒருவரும் இவ்விடயம் குறித்து வவுனியா நீதிவான் எம். இளஞ்செழியனுக்கு வாக்குமூலம் ஒன்றை அளித்தனர்.

ஏதோ எரிக்கப்படுவதைத் தாங்கள் அவதானித்து அத்திசைக்கு வெளிச்சம் ஒன்றைப் பாய்ச்சிய வேளை அங்கு நின்ற இனந்தெரியாத வான் ஒன்று தப்பி ஓடிவிட்டது என்றும், எனினும் அதனை அடையாளம் காணமுடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான், பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் அதனை வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்புகிறோம். இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது. இதனை உரிமையோடு கேட்டுப்பெற வேண்டிய கடமை தமிழக அரசுக்கு இருக்கிறது. - என்றார்.

(அ-1-5)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவ்தேஜ் சர்னா கடந்த வெள்ளிக்கிழமை மறுத்திருந்தார். அதனைத் தொடர்ந்தே இலங்கை அரசு மன்னிப்புக் கோரியுள்ளது.

## வதிரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை அடையாளம் காணும் பொருட்டு சம்பவத்தில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டிருந்த இருவர் பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். எனினும் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-155)

## சர்வதேச... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகத் தெரிகின்றது.

அதேவேளை, மேற்படி ஆணைக்குழுவில் பிரதிநிதித்துவம் வகிக்கும் தனது நேச நாடுகள் இடையே ஆதரவு திரட்டி, இந்த முயற்சியை முறியடிப்பதில் இலங்கை அரசும் தீவிரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்லவேண்டும் என வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்தக் கூட்டத் தொடரில் நிறை வேற்ற வைக்கும் முயற்சியில் பல மனித உரிமைகள் தரப்புகள் முனைந்து நிற்கின்றன.

### அரசுக்கு எதிரான முயற்சிகளை முறியடிக்க முன் ஆயத்தம்

இதேசமயம், இலங்கை அரசுக்கு எதிரான இந்தப் பிரசார முயற்சிகளை முறிய டிக்கும் முன் ஆயத்த வேலைகளில் இலங்கையின் உயர்மட்டக் குழு ஒன்று கடந்த வாரம் ஜெனிவாவில் முனைப்பாக ஈடுபட்டிருந்தது.

இலங்கையின் இடர்முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமர சிங்க, சட்டமா அதிபர் ஸி. ஆர். டி சில்வா, இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ விஜே சிங்க, ஜெனிவாவில் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலக ஆகியோர் அடங்கிய குழுவே இந்தப் பிரசார நட வடிக்கையில் ஈடுபட்டது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோரோடு இக்குழு விரிவான பலசுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டது.

மனித உரிமைகளுக்கான ஐ. நா. தூதுவரின் இவ்வருடத்துக்கான அறிக்கை மீதான விவாதம் 13 ஆம் திகதி இடம்பெறும். பாதுகாப்புக் கவுன்ஸிலின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய மனித உரிமை விவகாரங்கள் குறித்து எதிர் வரும் 24 ஆம் திகதி தீர்மானிக்கப்படும் எனத் தெரிகின்றது.

(சி)

**VCM INSTITUTE**
இணைந்த கணிதம்
*A/L 2007 Repeat*
துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்
12.09.2007 (புதன்) 3 pm
B.ரவீந்திரன் B.Sc

## நல்லை முருகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க மாநகரசபையும் பிரதேச செயலகமும் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை, சாரணர் அமைப்புக்கள் வீதிகளில் பணிபுரிந்து பக்தர்களின் போக்குவரத்தை சீராக்குவர்.

### போக்குவரத்து வசதி

வெளியிடங்களில் இருந்து பக்தர்கள் வந்து தேர்த்திருவிழாவில் பங்குபற்ற வசதியாக போக்குவரத்துச் சபையும் தனியார் பஸ் சேவை சங்கத்தினரும் விசேட போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆலயத்தில் கூடும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க துர்க்கா மணிமண்டபத்திலும் நல்லை ஆதீனத்திலும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. துர்க்கா மணி மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கமே அன்னதானம் வழங்கப்படும்.

தேர்த்திருவிழா நிகழ்வுகளை நேரடியாக அஞ்சல் செய்வதற்கு இலங்கை ஒலிரப்புக் கூட்டுத்தாபனம், சக்தி எவ்.எம். ஆகியன ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதைவிட வெளிநாட்டில் இயங்கும் ஒலிபரப்பு நிலையங்களும் உற்சவ நிகழ்வை நேரடியாக அஞ்சல் செய்ய ஒழுங்குகளைச் செய்துள்ளன.

### சப்பரத் திருவிழவில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள்

இதேவேளை -

நேற்று மாலை இடம்பெற்ற சப்பரத் திருவிழாவில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

நேற்று ஊரடங்கு முற்றாக நீக்கப்பட்டதால் வெளியிடங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஆலயத்துக்கு வந்திருந்தனர்.

நேற்று இரவு வரை மக்கள் ஆலயத்தில் காணப்பட்டனர்.

பெருந்திருவிழா உற்சவம் ஆரம்பமாகிய பின்னர் நேற்றைய தினமே கூடுதலான பக்தர்கள் ஆலயத்தில் திரண்டு வந்ததாக மதிப்பிடப்பட்டது. (அ-1)

## பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு முதல்நாள், இந்த நாடுகளின் உள்துறை செயலாளர்கள் சந்தித்து இந்த உடன்படிக்கை வாசகத்தை உறுதி செய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'சார்க்'கில் அங்கம் வகிக்கும் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு இலங்கை ஆகிய எட்டு நாடுகளின் நிபுணர்களே இந்த நகல் உடன்படிக்கையை ஆராய இன்று கொழும்பில் கூடுகின்றார்கள். (சி)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology
On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)
Work Shop Class
- PC Maintenance & Repairs
Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++
விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 12/09/2007
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் - 15/09/2007
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-
Centre for Information Technology
-Executive Officer

DIPLOMA IN MOBILE PHONE REPAIRING
(சகல வகையான கையடக்கத் தொலைபேசி களையும் 100% நீங்களே திருத்துவதற்கான தொழில் சார் கற்கைநெறி)
சுயதொழில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற 100% செயல்முறைப் பயிற்சி அடங்கிய கற்கைநெறி.
SOFTWARE & HARDWARE REPAIRING
* Spares அறிமுகமும் அதன் தவறுகளும்
* IC க்களின் அறிமுகமும் அதில் ஏற்படும் தவறுகளும்
* Hot air gun / Soldering என்பவற்றின் உபயோகம்
* பலவிதமான Mobile Phone களையும், குறிப்பாக Ribbon Type Phone களை கழற்றும் முறை Ribbon மாற்றுதல் / Ribbon ஒட்டுதல் போன்ற பயிற்சி
* தவறுகளை கண்டுபிடிக்க Troubleshooting (i, ii, iii) ஒழுங்கு முறைகள்
* Mobile Lock உடைத்தல், Flashing செய்தல்
* Bluetooth / Infrared என்பவற்றின் உபயோகம். Etc...
By :- S.Selvathashan
(13.09.2007 அன்று 11.30 வகுப்புக்கள் ஆரம்பம்)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org